விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 11 புதன்கிழமை (25.06.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 189




## மின்சார சபைத் தலைவர் உட்பட உயர் அதிகாரிகள் பதவி விலகல்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபைப் பொறியியலாளர்கள் மேற்கொண்டு வந்த சட்டப்படி வேலை செய்யும் போராட்டம் கைவிடப்பட்டதனையடுத்து மின்சார சபைத் தலைவர் உட்பட உயர் அதிகாரிகள் அனைவரும் தமது பதவிகளிலிருந்து விலகியுள்ளனர்.

இதனால் மின்சார சபைக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நிலவி வந்த முறுகல் நிலை மேலும் தீவிரமடைந்துள்ளது.

மின்சார சபைத் தலைவர் மீதான நம்பிக்கையீனம், சம்பள உயர்வு, தீர்வையற்ற வாகன இறக்குமதி உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்துக் கடந்த சில நாள்களாக மின்சார சபைப் பொறியியலாளர்கள் சங்கத்தினர் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தை மேற்கொண்டு வந்தனர்.

இந் நிலையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## டீசலின் விலையை 10 ரூபாயால் குறைத்தது ஐ.ஒ.சி. நிறுவனம்

(கொழும்பு)

லங்கா ஐ.ஒ.சி. நிறுவனம் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் டீசலின் விலையை 10 ரூபாயினால் குறைத்துள்ளது.

இதன்படி 130 ரூபாயிற்று விற்பனையாகிய டீசல் ஒரு லீற்றரின் விலை 120 ரூபாயாகக் குறைவடைந்துள்ளது. டீசலின் விலையைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்துப் பெற்றோலிய வள அமைச்சர் பௌசி அனுப்பியிருந்த ஆலோசனைக் கடிதத்தின் அடிப்படையிலேயே டீசல் விலையைக் குறைப்பதற்குத் தீர்மானித்ததாக லங்கா ஐ.ஒ.சி. நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கே.இராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

பெற்றோலுக்கு அரசாங்கம் புதிய இறக்குமதித் தீர்வை (10 ஆம் பக்கம் பார்க்க)

# 13 ஆவது திருத்தச் சட்டத்தினை இடைக்கால தீர்வாக்க வேண்டும்

### சர்வமதத் தலைவர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வை ஆராய்கின்ற சர்வகட்சிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒரு இடைக்கால தீர்வாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சர்வ மதத் தலைவர்கள், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அந்தக் குழுவில் இடம்பெற்ற மன்னார் ஆயர் இராயப்பு யோசப் கூறியுள்ளார்.

இலங்கையில் நடக்கின்ற மனித உரிமை மீறல்கள், கொலைகள், காணாமல் போதல்கள், குறிப்பாக வெள்ளை வான் கடத்தல்கள் போன்றவை குறித்து உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் சர்வமதத் தலைவர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)



## வவுனியாவில் ஒருவர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா பூந்தோட்ட நலன்புரி நிலையத்திற்கு அருகில் நேற்று அதிகாலை 3.45 மணியளவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப்புலி உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

தரம்-05 புலமைப் பரிசில்
பயிற்சி வினாத்தாள் - 06
பகுதி -I

## தென்னிந்தியாவிலிருந்து நேரடியாக யாழ்ப்பாணத்திற்குப் பொருள்கள்

### ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுமதியளிப்பு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாடு மற்றும் பொருள்களின் விலையேற்றங்களைக் கருத்தில் கொண்டு வட பகுதிக்குத் தேவையான பொருள்களைத் தென்னிந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொழும்பிலிருந்து வட பகுதிக்குப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு அதிகளவு போக்குவரத்துச் செலவு ஏற்படுவதால் யாழ். குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

தென்னிந்தியாவிலிருந்து வட பகுதிக்கு நேரடியாகப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் வழங்கியதாக வட பகுதிக்கான விசேட செயலணிக் குழுவின் தலைவரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரித்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துச் செலவீனத்தைக் குறைக்கும் நோக்கில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கடும் மோதல்களினால் வன்னியில் பெருமளவு மக்கள் இடம்பெயர்வு

### ஐ.நா. முகவர் நிறுவனங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் காரணமாக வன்னியில் பாரியளவில் மக்கள் இடம்பெயர்ந்து வருவதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

நெடுங்கேணி, வவுனியா வடக்கு மற்றும் மன்னார் கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து மக்கள் பாதுகாப்பான பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்து வருவதாக ஐ.நா. முகவர் நிறுவனங்களின் நிலையியற்குழு தெரிவித்துள்ளது.

வட பகுதி முன்னரங்க நிலைகளில் தொடர்ச்சியாக இடம்பெறும் மோதல்கள் காரணமாக பிரதேசத்தில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருவதாகவும் இதனால் மனிதாபிமானத் தொண்டு (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் இறைமையைக் காக்க நோர்வே அரசாங்கம் ஆதரவு வழங்கும்

### வெளிவிவகார அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் இறைமையையும் பௌதிக ஒருமைப்பாட்டையும் பேணிப் பாதுகாப்பதற்கு நோர்வே அரசாங்கம் ஆதரவு வழங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையை சமாதான நாடாக மாற்றுவதற்குக் காட்டிய அர்ப்பணிப்பில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை என நோர்வே அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள விசேட ஊடக அறிக்கையில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதான முன்னெடுப்புக்களின் மத்தியஸ்தராக நோர்வே அரசாங்கம் செயலாற்றியது. (10 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்திய அரசு ஒருபோதும் இணங்காது

## ஜே.வி.பியின் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை தோல்வியடையச் செய்தால் இலங்கைப் பிரச்சினை தீர்ந்து விடும். இதனை இந்தியா ஒருபோதும் விரும்பாது என ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தோல்விபடைவதனை இந்தியா ஒருபோதும் விரும்பாது. படையினின் வன்னியைக் கைப்பற்றும் முயற்சியை தடுத்து நிறுத்த இந்தியா முயல்கிறது.

இதன் ஒரு கட்டமாகவே இந்திய உயர் மட்டக்குழுவினரின் இலங்கைக்கான விஜயம் அமைந்துள்ளது என்றும் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

1987ஆம் ஆண்டு வடமராட்சியினை படையினர் கைப்பற்ற முயன்றபோதும் இந்தியா இவ்வாறுதான் தடுத்து நிறுத்தியது. இலங்கை அரசாங்கம்இந்தியாவின் தேவைக் கேற்ப பிரச்சினையை தீர்க்க முனைகின்றது. இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்திய உயர் மட்டக்குழுவின் விஜயம் குறித்து ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா கூறியதாவது,

அவசர அவசரமாக இந்திய உயர்மட்டக் குழு இலங்கைக்கு வந்தமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் இக்குழுவினர் நடத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசாங்கம் எதுவிதமான தகவல்களையும் வெளியிடாது இரகசியமான வைத்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இந்தியாவுக்கு அடிமைப்பட்டு அவர்களின் தேவைக்கேற்ப பிரச்சினைகளை தீர்க்க முனைகிறது. பிரிவினைவாத பயங்கரவாதப் புலிகளுக்கு எதிராக எமது வன்னி படையினர் மேற்கொண்டுவரும் வெற்றிகரமான தாக்குதல்களை நிறுத்தச் செய்து வன்னியைக் கைப்பற்றுவதை தடுப்பதற்காகவே இந்திய உயர் மட்டக்குழு அவசரமாக இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

அன்று ஜே.ஆரை பழிவாங்குவதற்காக புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கி பயிற்சியளித்து வளர்த்துவிட்டதும் இந்தியாவாகும்.

எனவே புலிகள் தோல்வியடைந்தால் இலங்கையில் பிரச்சினை தீர்ந்துவிடும். இதனை இந்தியா ஒருபோதும் விரும்பாது. அது மட்டுமல்லாது வடக்கு கிழக்கிலுள்ள வளங்களை சூறையாடவும் அங்கு இந்தியாவின் ஆதிபத்தியத்தை நிலைநாட்டும் நோக்கிலேயேஅனைத்தையும் இந்தியா முன்னெடுத்து வருகிறது.

அன்று ஐ.தே.க அரசாங்கத்தைப் போன்று இன்றைய அரசாங்கமும் இந்தியாவின் பலாத்காரத்துக்கு அடிமையாகியுள்ளது. மேற்குலக நாடுகள் எமது நாட்டுப் பிரச்சினையில் தலையிடக் கூடாதென கூச்சலிட்ட தேசப்பற்றாளர்கள் இன்று மௌனமாக இருக்கின்றார்கள்.

இந்தியாவின் தலையீட்டினை அரசாங்கம் அனுமதிக்கக் கூடாதென்றார். (ச-5)

# மணலாறு, மன்னார் மோதல்களில் ஐந்து படையினர் பலி; 4பேர் காயம்

(கொழும்பு)

வன்னிக் களமுனைகளில் இடம்பெற்ற மோதல்களில் 5 படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வன்னிக்களமுனைகளான மணலாறு, மன்னார் ஆகிய இடங்களிலேயே இம்மோதல்கள் இடம்பெற்றுள்ளன. மணலாறுப் பகுதியிலேயே மோதல்கள் தீவிரமாக இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

மணலாறு கிரிவெண்வெவ பகுதியில்நேற்று முன்தினம் காலை முன்னரங்க நிலைகளில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதல்களில் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றொருவர் காயமடைந்தார்.

இதே பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 12.15 மணியளவிலும் பிற்பகல் 4 மணியளவிலும் மாலை 5.45 மணியளவிலும் மோதல்கள் மீண்டும் இடம்பெற்றன.

இதனையடுத்து நேற்று முன்தினமிரவு 8.40 மணியளவில் படையினரை இலக்கு வைத்து விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தினர்.

இச்சம்பவங்களில் 2 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 2 படையினர் காயமடைந்துள்ளனர். இதேவேளை கிரிவெண்வெவ வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் பகல் 11.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மீது படையினர் திடீர் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலின்போது படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார்.

மன்னாரின் பல பகுதிகளிலும் மோதல்கள் இடம்பெற்றன.

மன்னாரில் பெரியமடு, நெடுங்கண்டல், ஆண்டான்குளம், பாலமோட்டை ஆகிய இடங்களிலேயே மோதல்கள் இடம்பெற்றன. (ச-5)

## உலக உணவுத் திட்ட கல்விக்கான உணவுப் பொருள்

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத்திட்ட இரண்டாம் தவணை மிகுதி 30 நாட்களுக்கான உணவுப் பொருள் வழங்கலின் கீழ் வழங்கற் கட்டளை மாவட்ட செயலகத்தினால் இன்று முதல் சகல ப.நோ.கூ.சங்கங்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

எனவே ப.நோ.கூ.சங்கங்கள் இன்று வழங்கற் கட்டளையை மாவட்ட செயலகத்தில் இருந்து பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் களஞ்சியத்தில்இருந்து உணவுப்பொருட்களை முழுமையாக பெற்றுக்கொள்ளுமாறு திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை யூலை 5ஆம்திகதிக்குள் சகல பாடசாலைகளுக்கும் உணவுப் பொருட்களை விநியோகித்து முடிக்குமாறு திட்டப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)

# பிரித்தானிய ஆடைத் தொழிற்சாலையில் இலங்கை அகதிச் சிறுவர்கள் பணியில்

## தமிழக அதிகாரிகள் விசாரணை

பிரித்தானிய ஆடை நிறுவனமொன்றிற்காக தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் ஆடை உற்பத்தியில் இலங்கையில் இருந்து சென்ற அகதிச் சிறுவர்கள் பயன்படுத்தப்படுவது தொடர்பான பிரச்சினை தீவிரமடைந்துள்ளது.

தமிழ் நாட்டின் பவானி சாகர் அகதி முகாமில் இருக்கும் இலங்கைச் சிறுவர்களே இந்த ஆடை உற்பத்திகளில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

சுமார் 6 மாதங்கள் புலனாய்வு செய்தி அடிப்படையில் பி.பி.சி நிறுவனம் இது தொடர்பான காட்சிகளை பதிவு செய்து நேற்று முன்தினம் அதனை தனது தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக்கியது.

இதனையடுத்து குறித்த தொழிலுக்காக சிறுவர்கள் அமர்த்தப்பட்டனரா என்பதை ஆராய தமிழ்நாட்டு அதிகாரிகள் இணங்கியிருப்பதாக இந்தியாவுக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகர் பி.எம்.ஹம்சா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இந்த விடயம் பி.பி.சி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகவுள்ளதாக வெளியான தகவலையடுத்த பிரித்தானியாவில் உள்ள ஆடையகத் தலைமையகம் தமிழ்நாட்டில் உள்ள தனது கிளை நிறுவனத்தில் உள்ள விநியோகஸ்தர்கள் மூவரை இடைநிறுத்தியுள்ளது.

இதேவேளை பவானி சாகர் அகதி முகாமில் உள்ள சிறுவர்கள் ஆடைத் தொழிற்துறை உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் செய்தி தொடர்பில் தகவல்கள் எவையும் வெளியாகவில்லை என ஈழ அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் நிதிச் செயலாளர் சந்திரகாசன் தெரிவித்துள்ளார். (ச-5)

## உயிரியல் ஒலிம்ப்பியாட் போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை உயிரியல் ஒலிம்ப்பியாட் போட்டி சம்மந்தப்பட்ட பரீட்சை, முன்னர் அறிவிக்கப்பட்டபடி எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிமுதல் நண்பகல்12 மணிவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் நடத்தப்படும். இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைவரும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

அனுமதியட்டை தபாலில் கிடைக்காதவர்களையும் பிழையான தகவல்களுடனும் அனுமதியட்டை கிடைக்கப்பெற்றவர்களையும் இப்பரீட்சைக்கான யாழ்ப்பாண இணைப்பாளராகிய யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதியை நாளை வியாழக்கிழமை அவரது அலுவலகத்தில் சந்தித்து சரியான அனுமதியட்டையை பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி இ.குமாரவடிவேல் கேட்டுக் கொள்கின்றார். (ச-7)


**விற்பனைக்குண்டு**

39/2, சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணத்தில் சிறியரக வீடு உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்.

**S.வின்சென்ற்**
39/2, சோமசுந்தரம் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0776161058

(3382)


# 51 இலங்கை ஜோடிகளுக்கு வேலூரில் பதிவுத் திருமணம்

(வேலூர்)

அரசின் சலுகையைப் பெறுவதற்காகவும் மீண்டும் இலங்கை செல்லும் போது சிக்கல் ஏற்படாமல் தவிர்ப்பதற்காகவும் 51 இலங்கை அகதி ஜோடிகள் மீண்டும் திருமணம் செய்து கொண்டனர்.

இவ் வைபவத்தில் அவர்களது குழந்தைகளும் கலந்து கொண்டனர். வேலூர் மாவட்டம் வாலாஜா அருகே உள்ள அணைக்கட்டு முகாமில் ஏராளமான இலங்கை அகதிகள் உள்ளனர்.

இவர்களில் பல அகதிகள் முகாமுக்கு வந்த பின்னர் திருமணம் செய்து கொண்டனர். ஆனால் இதைப் பதிவு செய்யாமல் இருந்து வந்துள்ளனர்.

இதன் காரணமாக இவர்களுக்கு அரசின் பல சலுகைகள் கிடைக்காமல் இருந்து வந்தது. மேலும் எதிர்காலத்தில் இலங்கை செல்லும்போது திருமணப் பதிவுச் சான்றிதழ் இருந்தால்தான் மனைவியோடு இலங்கை திரும்ப முடியும் என்ற நிலையும் உள்ளது.

இதையடுத்து அணைக்கட்டு முகாமில் உள்ள 51 ஜோடிகள் மீண்டும் திருமணம் செய்யும் வைபவம் முகாமில் நடந்தது.

ராணிப்பேட்டை தொகுதி எம்.எல்.ஏ.காந்தி முன்னிலையில் 51 ஜோடிகளும் மாலை மாற்றி திருமணம் செய்து கொண்டு பதிவேட்டில் கையெழுத்திட்டு தங்களது திருமணத்தைப் பதிவு செய்து கொண்டனர்.

இந்த திருமண வைபவத்தில் அகதிகள் முகாமைச் சேர்ந்த அனைவரும் கலந்து கொண்டனர். திருமணம் செய்து கொண்ட ஜோடிகளின் குழந்தைகளும் திரண்டு வந்து தங்களது பெற்றோரின் திருமணத்தை பார்த்து ரசித்தனர். (ச-5)

## செயலமர்வு

வடமராட்சி நட்புதவியாளர் மாதாந்த செயலமர்வு இம்மாதம் 28,29ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விடயத்திற்கு பொருத்தமான ஆசிரியர்கள் தமது அறிக்கையுடன் தவறாது பங்குபற்றச்செய்யுமாறு பாடசாலை அதிபர்களை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவுறுத்தியுள்ளார். (ச-7-19)

# தமிழகம் மண்டபம் அகதி முகாமை வேறு இடத்திற்கு மாற்றத் திட்டம்

(சென்னை)

இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு செல்லும் அகதிகளின் பிரதான தளமாக விளங்கும் மண்டபம் முகாமை வேறு ஒரு இடத்திற்கு மாற்றுவது குறித்து ஆராயப்படுகின்றது.

இந்திய பாதுகாப்புத் தரப்பினர் இது சம்பந்தமான ஆலோசனையை முன்வைத்திருக்கிறார்கள். இலங்கையின் தலைமன்னாருக்கும் மண்டபத்திற்கு இடையில் குறைந்தளவு தொலைதூரமே இருப்பதால் சட்ட விரோத கடத்தல் நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் ஏற்படுவதாக இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளதுடன்.

இந்த முகாமை தமிழகத்தின் வேறு இடமொன்றிற்கு மாற்றுவதற்கான யோசனையையும் முன்வைத்தனர்.

இதனைத் தவிர மண்டபம் முகாமைச் சுற்றிவர பாதுகாப்புச் சுவரை அமைப்பது தொடர்பாகவும் யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டிருக்கிறது.

1917ஆம் ஆண்டு பிரித்தானியர்களால் அமைக்கப்பட்ட மண்டபம் முகாம் இலங்கைக்கு இந்திய வம்சாவளித் தமிழர்களை தேயிலை மற்றும் கோப்பி பயிர்ச்செய்கை தொழிலாளர்களாக அனுப்பி வைப்பதற்கான இடைத்தங்கல் முகாமாக செயற்பட்டது.

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளின் 115 அகதி முகாம்களுக்கு பிரதான இடைத்தங்கல் முகாமாக இது இருந்து வருகிறது.

பாதுகாப்பு சுவரற்ற 287 ஏக்கர் விஸ்தீரணமான இந்த முகாம் படகுகளை நிறுத்துவதற்கும் பயணிகளை ஏற்றுவதற்கும் வசதிகளைக்கொண்டுள்ளது.

அதேநேரம் இலங்கை அகதிகளும் மண்டபம் முகாமிலேயே தங்கியிருப்பதற்கு பெரிதும் விரும்புவதாக தெரியவருகிறது. (ச-6)

## அடிப்படை ஆங்கிலக் கற்கை நெறிக்கான விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

கல்வியமைச்சினால் பாடசாலையை விட்டு விலகியோருக்கும் வளர்ந்தோருக்கும் என நடத்தப்படவுள்ள அடிப்படை ஆங்கிலக் கற்கை நெறிக்கு வடமராட்சி வலயத்திற்கு உட்பட்டவரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை எதிர்வரும் 28ஆம்திகதிக்கு முன்னர் வடமராட்சி வலய ஆசிரிய நிலைய முகாமையாளருக்கு அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ச-19)

## இன்று ஒரு தகவல்

# அறிவுள்ள கருணை

இந்த உலகத்தில் கருணை காட்டவேண்டியது மிகவும் அவசியம் தான்! இருந்தாலும் எல்லோரிடமும் கருணை காட்டிக் கொண்டிருக்க முடியாது! முதலில் அறிவுவேலை செய்ய வேண்டும். அதன்பின் தான் கருணைகாட்டுவதா இல்லையா என்பதைப்பற்றி முடிவுசெய்யவேண்டும்.

ஒருபெரியவர் வெளியூர் போய் வீட்டுக்கு வேண்டிய பொருட்களெல்லாம் வாங்கிக்கொண்டு திரும்பிவந்து கொண்டிருந்தார். நன்றாக இருட்டிவிட்டது! ஒரு அடர்ந்த காட்டின் வழியாக... தலையில் மூட்டையுடன் நடந்து வந்து கொண்டிருந்தார். புதர் மறைவில் இருந்த புலி ஒன்று இவரைப் பார்த்துவிட்டது! உடனே இவரின் மீது பாய ஓடி வந்தது! பெரியவருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. ஓடிப்போய் ஒரு மரத்துக்குப் பின்னால் மறைந்து கொண்டார்.

அந்தப்புலி ஓடிப்போய் அந்த மரத்துக்கு முன்னால் நின்றது! அந்தப்பக்கம் அவர். இந்தப்பக்கம் புலி. நடுவில் மரம். புலி நிமிர்ந்து நின்று... முன்னங்கால் இரண்டை யும் மரத்துக்கு இரண்டுபக்கமாகவும் நீட்டியது. அந்தப் பக்கமாக நின்று கொண்டிருந்த பெரியவர் அதன் முன்னங்கால் இரண்டையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்! நடுவில் மரம் இருந்ததால் பெரியவரும் புலியும் மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள்! பெரியவர் பிடித்த பிடியைவிடவில்லை. விட்டால் புலி கிட்டவந்துவிடும்! கையெல்லாம் வலிக்க ஆரம்பித்தது.

என்ன செய்வது—எப்படித் தப்பித்துக் கொள்வது என்று ஒன்றும் புரியவில்லை! அந்த நேரம் பார்த்து ஒருவன் அந்த வழியாக வந்து கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு துப்பாக்கியும் இருந்தது. அதைக்கண்டதும் பெரியவர் நிம்மதியாக மூச்சுவிட்டார். இனிமேல் எப்படியும் பிழைக்கலாம்—என்ற தைரியம் அருக்கு!

"சீக்கிரமா இங்கே வா!" என்று அந்த ஆளைப் பார்த் துக் கூப்பிட்டார். அவன் வந்ததும் "இதோ பாரப்பா... இந்தப் புலியை உன் துப்பாக்கியால் சுட்டுவிடு" என்றார்.

அந்த ஆள் ஜீவகாருண்யம் பேச ஆரம்பித்துவிட்டான். "பெரியவரே! புலியும் ஓர் உயிர்– நீயும் ஓர் உயிர்! ஜீவனுக்கு கருணைகாட்டுபவன் நான்! அதனால் நான் புலியை சுடமாட் டேன்" என்று சொல்லி விட்டான்.

அப்படி இல்லை... புலி ஒரு மிருகம்... ஆனால் நான்மனி தன்! புலி பலபேரைக் கொல்லக்கூடியது! நான் பல பேருக்கு உதவி செய்யக்கூடியவன் என்னை நம்பி எனது வீட்டில் மனைவி மக்களெல்லாம் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆறறிவு படைத்த மனிதனும் ஐந்தறிவு படைத்த மிருகமும் ஒன்றா? ஆபத்து வேளையில் நீ எனக்கு உதவிசெய்! அதுதான் நியாயம்!" என்றார் பெரியவர்.

"அதெல்லாம் முடியாது! நான் எப்பொழுதும் அறநெறியை விட்டு விலகமாட்டேன்! ஒரு உயிருக்காக இன்னொரு உயி ரைக் கொல்லமாட்டேன்!" என்றான் அந்த ஆள். பெரியவர் யோசித்தார். சரி! நீ புலியைக் கொல்ல வேண்டாம். எனக்கு ஒரு உதவியாவது செய்! என்றார். "அது வேண்டுமென்றால் செய்கிறேன். என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள்"! என்றான்.

"எனக்கு தாகமாக இருக்கிறது! அதனால் கொஞ்சநேரம் இந்தப் புலியின் காலைப் பிடித்துகொண்டு இரு! நான் போய் விட்டு வருகிறேன்!" என்றான் அவன் துப்பாக்கியை கீழே வைத்து விட்டு சரியென்று சொல்லி அதுமாதிரியே பிடித்துக் கொண்டான். பெரியவர் போய் வந்தார். வந்தவர் மூட்டையைத் தூக்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தார். அந்த ஆளுக்கு தூக்கிவாரிப் போட்டது.

"என்னை இப்படிமாட்டிவிட்டு நீங்கள் நடையைக் கட்டுகிறீர்களே? இது நியாயமா?" என்று கேட்டான். "எனக்கு சில கடமைகளெல்லாம் இருக்கிறது அதை யெல்லாம் முடித்து விட்டு வந்துவிடுகிறேன்!" என்று தொடர்ந்து நடக்க ஆரம்பித்தார். அவ்ன் கெஞ்சினான். அது மட்டுமல்ல... "இந்த துப்பாக்கியை எடுத்து புலியை சுட்டுவிடுங்கள்!" என்று கேட்டுக்கொண்டான்.

பெரியவர் பார்த்தார். "இப்பொழுதுதான் உனக்கு நியாயம் புரிந்திருக்கிறது. புலியைவிட நீ உயர்தவன். நீ வாழ்ந்தால் எத்தனையோ பேருக்கு உதவியாக இருப்பாய்! அதனால் நீ வாழ வேண்டும். ஆனால் எனக்கு சுடத்தெரியாது. அதனால் நான் புலியின் முன்னங்காலை பிடித்துக் கொள்கிறேன் நீ புலியை சுட்டு விடு!" என்றார் பெரியவர்.

உடனே பெரியவர் புலியைப் பிடித்துக்கொண்டார். அந்த ஆள் புலியைக் கொண்டுவிட்டான்! இதுதான் அறிவுள்ள கருணை! அறிவைப் பயன்படுத்தாமல் கருணை காட்டினால் அது ஆபத்தில்தான் முடியும்!

நம்ம ஆட்கள் கருணை காட்டுவதில் எத்தனையோ ரகம் இருக்கிறது. ஒருவர் குளத்தில் விழுந்துவிட்டார். நீச்சல் தெரியாததால் தத்தளித்துக்கொண்டிருந்தார். இன்னொருவர் அதைப் பார்த்து இரக்கப்பட்டார். உடனே குதித்து அவரை காப்பாற்றி னார். "என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி! உங்களின் ஜீவ காருண்யத்தைப் பாராட்டி 50 காசு கொடுக்க வேண் டுமென்று நினைக்கிறேன். ஆனால் என்னிடம் 1ரூபாய் தான் இருக்கிறது. அதுதான் என்ன, செய்யலாம் என்று யோசிக்கிறேன்." என்றார் அவர்.

அதற்கு இவர் "அப்படியென்றால் இன்னொரு தடவை குளத்தில் விழுங்க... காப்பாற்றி விடுகிறேன்! ஒரு ரூபாயாக கொடுத்து விடுங்கள்!" என்றார் இந்தக் கருணையை எந்த ரகத்தில் சேர்க்கிறது?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ்மொழித் தினம்- 2008 கோட்ட மட்டப் போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

சங்கானைக் கோட்டம்...

*பேச்சு*

*பிரிவு-3*

வி.ஸ்ரீசுபாங்கி- வட்டு மத்திய கல்லூரி, சி.செவ்வந்தி-பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., சி.அனுசியா-அராலி வள்ளியம்மை ஞாப.வித்தி., தி.திலீனா-சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி.

*பிரிவு-4*

வி.ஸ்ரீமாதங்கி - வட்டு மத்திய கல்லூரி, சூ.சுலக்சனா-சங்கானை சிவப்பிரகாச ம.வி., கு.பாலமுகுந்தன்-பண்ணாகம் மெய்கண்டான் ம.வி..

*பிரிவு-5*

பொ.கிருஷாந்-சங்கானை சிவப்பிரகாச ம.வி., நா.சுஜிதா-வட்டு மத்திய கல்லூரி, தா.யூலியட்சிரோமியா-பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

**பாவோதல்** *பிரிவு-1*

த.திவாகினி-தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி., தி.சுஜீவன்- யாழ்ப்பாணக் கல்லூரி, ச.வைஷ்ணவி-பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

பிரிவு-2

கு.அபிராமி-பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., ம.சங்கவி-வட்டு மத்திய கல்லூரி, நா.சங்கவி-அராலி சரஸ்வதி ம.வி.

*பிரிவு-3*

சு.துசியந்தினி-சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி., சி.நிவேதா-பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., பு.வைஸ்ண வன் -தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தி.

*பிரிவு -4*

கி.பார்த்தீபன்-யாழ்ப்பாணக்கல்லூரி, கா.சர்மிலா-வட்டு மத்திய கல்லூரி, இ.சங்கீதா-வட்டு இந்துக்கல் லூரி.

*பிரிவு-5*

க.திருவரசி-வட்டு மத்திய கல்லூரி, இ.அனுஜா-யாழ்ப்பாணக்கல்லூரி, வ.தனுசாந்தி-சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

**இசைவும் அசைவும்** *பிரிவு-1*

வே.சிவகலை-மூளாய் சைவப் பிரகாச வித்தி., கு.தேவஅனுஷியா-அராலி சரஸ்வதி ம.வி., க.கிருஷியா-சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தி.

**இசை தனி** *பிரிவு-2*

மு.சுதர்சினி-தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தி., வ.கஜேந்திரன்-வட்டு மத்திய கல்லூரி, மோ.டென்சிகா-அராலி இந்துக்கல்லூரி.

*பிரிவு -3*

வி.வைஸ்ணவி-யாழ்ப்பாணக் கல்லூரி, மா.தனுசியா-வட்டு இந்துக்கல்லூரி, சி.பிரசாந்-சங்கானை சிவப்பிரகாச ம.வி.

*பிரிவு-4*

ச.ரவிகரன்-வட்டு இந்துக்கல்லூரி, வி.ரிசாயினி-வட்டு மத்திய கல்லூரி, த.விந்துகா-சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

*பிரிவு-5*

சா.ஸ்தீபா-சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, ந.மேகலா-யாழ்ப் பாணக்கல்லூரி, ஞா.கிருத்திகா-பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

**இசை** *குழு -1*

வட்டு இந்து கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச ம.வி., அராலி இந்துக்கல்லூரி.

*குழு -2*

சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச ம.வி., யாழ்ப்பாணக்கல்லூரி.

**நடனம்** *தனி-1*

ப.பிரியங்கா-யாழ்ப்பாணக்கல்லூரி, து.தக்ஷனா-பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., ப.தரணிக்கா-மூளாய் சைவப்பிரகாச வித்தி.

*பிரிவு-2*

பா.ரூபினி-சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, ச.தர்ஷனா-யாழ்ப் பாணக் கல்லூரி, செ.துர்க்காயினி-மூளாய் சைவப்பிரகாச வித்தி.

*பிரிவு-3*

த.நிதுஜா-சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, கு.சஞ்சிகா-சங்கானை சிவப்பிரகாச ம.வி., ஜெ.அபிராமி-யாழ்ப்பாணக்கல்லூரி.

*பிரிவு-4*

ச.லாவண்யா-சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, சி.மிறேஜினி-சங்கானை சிவப்பிரகாச ம.வி., மு.சாம்பவி-யாழ்ப்பாணக்கல்லூரி.

*பிரிவு-5*

ச.தாரணி-சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, இ.மயிந்தா-யாழ்ப்பாணக் கல்லூரி.

**நடனம்** *குழு-1*

சங்கானை சிவப்பிரகாச ம.வி., வட்டு இந்துக்கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி.

**நாட்டிய நாடகம்** *குழு-2*

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி,

**நாடகம்** *தி.போ.*

யாழ்ப்பாணக்கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, வட்டு இந் துக் கல்லூரி.

**வில்லுப்பாட்டு** *தி.போ.*

சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, யாழ்ப்பாணக்கல்லூரி.

**விவாதம்** *தி.போ.*

சங்கானை சிவப்பிரகாச ம.வி., அராலி சரஸ்வதி ம.வி.

**தமிழறிவு வினா விடை போட்டி** *தி.போ.*

பண்ணாகம் மெய்கண்டான் ம.வி, சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி. *

## இராசிபலன்

25.06.2008

(ஆனி 11, புதன்கிழமை)

பூரட்டாதி பின்னிரவு 12.10 மணிவரை

ஸ்தமி பின்னிரவு 12.15 மணிவரை

இராகுகாலம் 11.55-01.25 மணிவரை

சுபநேரம்-04.25-05.55 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | குடும்ப மகிழ்ச்சி, சுபநிகழ்வு, தொழில் நன்மை, கீர்த்தி. |
| இடபம் | அதிக பிரயாசை, நல்ல செய்தி, கல்வியில் ஆர்வம், போசனசுகம். |
| மிதுனம் | புதிய திட்டமிடல், கட்டுப்பாடு, காரிய தாமதம், பிரயாணம். |
| கடகம் | அபகீர்த்தி, காரியதடங்கல், கலகம், உடல்நலக்குறைவு. |
| சிங்கம் | எடுத்தகாரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி. |
| கன்னி | தேகநலன், பிறர் உதவி, காரிய அனுகூலம், போசனசுகம். |
| துலாம் | வியாபார நன்மை, முயற்சி தாமதம், ரோகநிலை, பணவிரயம். |
| விருச்சிகம் | மரியாதைக்குறைவு, தாய்வழி உறவு, சுபசெலவு, முயற்சிகைகூடும். |
| தனுசு | கூட்டுமுயற்சி, போசனசுகம், பிரயாணம்,நண்பர்கள் உதவி. |
| மகரம் | பணவிரயம், காரிய தடங்கல், உல்நலக்குறைவு, கோபப்படுதல். |
| கும்பம் | சிந்தனை மிகுதி, போசனசுகம், காரியதாமதம், பொருள்சேர்க்கை. |
| மீனம் | காரிய அலைச்சல், பணவிரயம், சயனசுகக்குறைவு. |

வளவன்

## தமிழ்கத்தில் சொத்து வாங்கிய அகதிகளின் விபரம் திரட்டப்படுகிறது

(சென்னை)

தமிழகத்தில் நிலம், வீடு அல்லது மோட்டார் வாகனங்கள் வாங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் குறித்த விபரங்களை தமி ழக அரசு சேகரிக்கத் தொடங்கியிருக்கிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்கள் மாநாட்டில் பேசிய முதல்வர் கருணாநிதி அகதிகள் இவ்வாறு சொத்துக்கள் வாங்குவது குற்றம் அனுமதிக்கப் படக்கூடாது. உண்மையான அகதிகளுக்கு வேண்டிய உதவிகள் செய்யலாம். ஆனால் சட்டத்திற்கு புறம்பான செயல்களில் அவர்கள் ஈடு படக்கூடாது எனக் கூறியிருந்தார்.

ஆனால் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழக நிறுவனர் சந்திரஹாசன், இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் சொத்துகளை சில நியதிகளுக்கு உட்பட்டு வாங்கமுடியும் என்கிறார். ரேஷன் கார்ட்டு அல்லது வாக்காளர் அட்டை போன்றவற்றை அகதிகள் பெறுவதாகக் கூறப்படுவது தவறு என்ற அவர் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

ஆனால் இலங்கைத் தமிழர்கள் நலனை பாதிக்கும் வகையில் தமிழக அரசு நடந்துகொள்ளாது என தாம் நம்பு வதாகவும் தெரிவித்தார். (அ)

## மின்சாரசபை தலைவர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் இராஜினாமா

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையின் தலைவர் உதய ஸ்ரீ காரியவசம் உள்ளிட்ட உயரதிகாரிகள் பலர் நேற்று முன்தினம் இரவு தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

இலங்கை மின்சார சபைத் தலைவர் உதய ஸ்ரீ காரியவசம் நேற்று முன்தினம் மாலை தான் சுயவிருப்பில் பதவியை இராஜினாமா செய்து கொள்வதாகக்கூறி எரிசக்தி அமைச்சர் டபிள்யூ .ஜே. செனவிரட்ண்விடம் கடிதத்தை கையளித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து ஏனைய உயரதிகாரிகளும் தமது இராஜினாமா கடிதத்தை அமைச்சரிடம் கையளித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



செங்குந்தா இந்துக் கல்லூரி அதிபர் இரத்தினம் பாலகுமார் தலைமையில் நடைபெற்ற தலைமைத்துவ பயிற்சியில் கலந்து கருத்துரை வழங்கிய பரு.சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா, கலந்துகொண்ட ஆசிரியைகள், மாணவ மாணவிகள் ஆகியோரைப் படங்களில் காணலாம்.

## மஹோற்சவம்

சித்தன் கேணி தனுவோடைப்பதி ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 30 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 7ஆம் திகதி திங்கட்கிழமை நிருத்த உபசார சமர்ப்பணமும், சப்பறத்திருவிழாவும், 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பஞ்சரத பவனியும், 9ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு நடராஜர் அபிஷேகமும் உத்தர தரிசனமும், 11 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை 4 மணிக்கு கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது. (17)

## கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச கலாசாரப் பேரவை நடாத்தும் கலாசார விழா-2008 எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 முதல் 5.30 மணிவரை 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற "கைத்தூது கலையகத்தில்" யாழ்ப்பாண பிரதேச செயலாளரும் கலா சாரப் பேரவைத் தலைவருமான மரியதாசன் ஜெகூ தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் க.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக மேலதிக மாவட்டச் செயலாளர் வி.சிவசுவாமி, நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில் நந்தனன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (7)

## விளையாட்டுப் விழா

(வட்டுக்கோட்டை)

வலி மேற்கு பிரதேச சபை கஜமுகன் முன்பள்ளி சிறுவர்களின் விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலி மேற்கு பிரதேச சபை மைதானத்தில் (யா/வட்டு மத்திய கல்லூரிக்கு அருகாமை) பெற்றோர் சங்கத்தலைவி திருமதி கு.புஸ்பலதா, முன்பள்ளி பொறுப்பாசிரியர் திருமதி செ.திலகரஞ்சினி ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சுழிபுரம் வலி மேற்கு பிரதேசசபை செயலாளர் க.பாலசுப்பிரமணியம், கௌரவவிருந்தினராக யா.வட்டுமத்திய கல்லூரி அதிபர் ந.சபாரட்ணசிங்கி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## வருடாந்த பரிசளிப்பு விழா

(சங்கானை)

சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று மு.ப.9 மணிக்கு பாடசாலை அதிபர் செல்வி நா.ஜெயராணி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் செல்வி வி.கந்தையாவும், சிறப்பு விருந்தினராக லயன்ஸ் வைத்திய கலாநிதி எஸ்.சதாசிவமும், அவர்தம் பாரியாரும், கௌரவ விருந்தினராக எம்.கே.சுப்பிரமணியம் நீதிநேசனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். நிறுவனர் உரையை ஓய்வுபெற்றவிலை மதிப்பீட்டு அதிகாரி வி.கே.விஜரட்ணம் நிகழ்த்துவார்.

பரிசு வழங்கலைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் எனப் பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (7-15)

# தமிழ் மொழித்தினப் போட்டிகள்

வடமராட்சி கல்வி வலய மட்ட தமிழ் மொழித்தினப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர் விபரம் கீழே தரப்படுகின்றது. வலய மட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்கு பற்ற தகுதியுடையவர்கள்.

இவற்றில் தனி நிகழ்ச்சிகள் மற்றும் குழு நிகழ்ச்சிகளுக்கான போட்டிகள் முறையே 28, 29 ஆம் திகதிகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

**வாசிப்பு** *பிரிவு-1*
நிகோபா-கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி., கோபிகா- கெருடாவில் இ.த.க.பாட.

**ஆக்கத்திறன் வெளிப்பாடு** *(கதைகூறல்)*
கு.நிதுஷா-கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.

**ஆக்கம் எழுத்து** *பிரிவு-1*
ச.மதுசுஜா- கெருடாவில் இ.த.க.பாட.

**கட்டுரை வரைதல்** *பிரிவு-2*
கோ.மயூரி-மெதடிஸ்த பெ.உ.பா.
*பிரிவு-3*
ம.மாதங்கி-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**கட்டுரை வரைதல் (இலக்கியம் நயத்தல்)**
*பிரிவு-4*
சி.சிவநந்தினி-மெதடிஸ்த பெ.உ.பா.

**தமிழியற் கட்டுரை வரைதல்** *(இலக்கியம் நயத்தல்)*
*பிரிவு-5*
பொ.பாரதி- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**இலக்கணப் போட்டி** *பிரிவு-4*
சு.அனுஷா-வட இந்து மகளிர் கல்லூரி,
*பிரிவு-5*
பா.யாழினி-வட இந்து மகளிர் கல்லூரி.

**திறனாய்வு போட்டி** *பிரிவு-5*
பு.ஜீவனா-விக்னேஸ்வராக் கல்லூரி.

**குறு நாடக ஆக்கம்** *பிரிவு-4*
ம.கிருஷாளினி- நெல்லியடி ம.ம.வி.
*பிரிவு-5*
சி.தனுசியா- ஞானசாரியார் கல்லூரி.

**கவிதை ஆக்கம்** *பிரிவு-4*
க.பிரசாத்-ஹாட்லிக் கல்லூரி, இ.பமிலா-சிதரம்பராக் கல்லூரி.

**சிறுகதை ஆக்கம்** *பிரிவு-4*
ம.காயத்திரி-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
*பிரிவு-5*
வே.பவித்தியா-அம்மன் அ.மி.த.க.

**பேச்சு** *பிரிவு-1*
லோகிதன்-தம்பசிட்டி மெ.மி.த.க.
*பிரிவு-2*
மு.பாவலன்- ஹாட்லிக்கல்லூரி.
*பிரிவு-3*
த.கோகுலன்- ஹாட் லிக்கல்லூரி.
*பிரிவு-4*
வ.சுஜீவன்-ஹாட்லிக் கல்லூரி.
*பிரிவு-5*
பா.மதுரா-மெதடிஸ்த பெ.உ.பா.

**பாவோதல்** *பிரிவு-1*
பி.வைஷ்ணவி- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.
*பிரிவு-2*
லி.ஜெயசுதா-நெல்லியடி ம.ம.வி.
*பிரிவு-3*
நி.சாமந்தி-நெல்லியடி ம.ம.வி.
*பிரிவு-4*
பொ.ஜெயகௌரி-வட இந்து மகளிர் கல்லூரி.
*பிரிவு-5*
பொ.விஜிதா-மெதடிஸ்த பெ.உ.பாட.

**இசையும் அசைவும்** *பிரிவு-1*
அ.சர்மினி-நெல்லியடி ம.ம.வி.

**இசை தனி** *பிரிவு-2*
ஸ்ரீ.விதுர்சன்-நெல்லியடி ம.ம.வி.
*பிரிவு-3*
சி.நிதர்சன்- ஹாட்லிக்கல்லூரி.
*பிரிவு-4*
ச.கபாஸ்கர்- ஹாட்லிக்கல்லூரி.
*பிரிவு-5*
செ.செல்வரஜீபன்-ஹாட்லிக்கல்லூரி.

**இசை குழு** *பிரிவு-1*
ஹாட்லிக்கல்லூரி
*பிரிவு-2*
உடுப்பிட்டி அ.மி.க.

**நடனம் தனி** *பிரிவு-1*
த.அபிஷேகா-நெல்லியடி மெ.மி.த.க.
*பிரிவு-2*
கி.துஷானி-வடமத்திய மகளிர் கல்லூரி.
*பிரிவு-3*
ஸ்ரீ.ஷார்கிர்த்தியா-நெல்லியடி ம.ம.வி.
*பிரிவு-4*
வே.கேல்ஸ்கீர்த்திகா- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
*பிரிவு-5*
ந.அபிநயா-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**நடனம் குழு** *பிரிவு-1*
மெதடிஸ்த பெ.உ.பா.

**நாட்டி நாடகம்** *(தி.போ)* *பிரிவு-2*
மெதடிஸ்த பெ.உ.பா.

**நாடகம்** *(தி.போ)*
ஹாட்லிக் கல்லூரி.

**வில்லுப்பாட்டு** *(தி.போ)*
கற்கோவளம் மெ.மி.த.க.பா.

**விவாதம்**
விக்னேஸ்வராக் கல்லூரி.

**தமிழறவு வினாவிடைப்போட்டி**
விக்னேஸ்வராக் கல்லூரி. (7)

## முகாமைத்துவ உதவியாளர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 9ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் 26ஆம் திகதி வியாழக் கிழமை காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்.மாநகரசபை செயலாளர் இ.இரத்தின சிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், யாழ். பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ, யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், யாழ். பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ம.வசந்தகுமார், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தலைவர் எஸ். குலசிங்கம், சங்கத்தின் முன்னாள் தலைவர் ரி. கே.இராஜேந்திரராவ் ஆகியோர் கலந்து சிறப் பிப்பதுடன், ஓய்வு பெற்ற அங்கத்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.

ஏற்கனவே அறிவித்ததன் பிரகாரம் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொதுக் கூட்டம் நடாத்த முடியாமைக்கு வருந்துவதாக வும், 26 ஆம் திகதி கூட்டத்தில் பங்கு பற்றும் அங்கத்துவர்கள் ஒருநாள் கடமை லீவு பெற விண்ணப்பிக்குமாறும் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து தமது அபிப்பிராயங்கள், பிரச்சினைகளை முன்வைக்குமாறும் சங்கத்தின்பொதுச் செயலாளர் தி.உதயசூரியன் கேட்டுக்கொண்டுள்ளார். (7)

## தென்னை பனை எச்சங்களை கொண்டு செல்வதற்கான அனுமதி

(காரைநகர்)

காரைநகரிலிருந்து வெளியிடங்களுக்கு தென்னை, பனை எச்சங்களான ஊமல், பனைமட்டை, தென்னைமட்டை, பனை ஓலை, தென்னோலை போன்றவற்றை துவிச்சங்கர வண்டி, மினிபஸ் மற்றும் பஸ் வண்டிகளிலும் கொண்டு செல்ல உதவி அர சாங்க அதிபரின் அனுமதி தேவையில்லை என்றும் இரு சக்கர உழவு இயந்திரங்களில் பனை-தென்னை எச்சங்களை கொண்டு செல்லும் போது மட்டும் உதவி அரசாங்க அதிபரின் அனுமதி தேவை எனவும் காரை நகர் உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (7)

## கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை

சுன்னாகம் மேற்கைச் சேர்ந்த குணரத்தினம் கஜன் என்பவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் 870784830 V விசேட அடையாள அட்டை இலக்கம் 0906033224 ஆகியன கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரத்துடன் பெற்றுக்கொள்ளவும். (7)

## யாழ்.செய்திகள்

## பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சகல திணைக்களத் தலைவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார். (7-19)

## அறிமுக எழுச்சி விழாவும் விளையாட்டு விழாவும்


ஆணைக்கோட்டை (முள்ளி) கரைப்பிரான் இலங்கை வங்கிக்கிராமம் அறி முக எழுச்சி விழாவும் விளையாட்டு விழாவும் யாழ்.ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கி மேற்தரக் கிளையின் அனுசரணையுடன் கலை ஒளி விளையாட்டு மைதானத்தில் இன்று புதன்கிழமை பி.ப.2 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக் கல்லூரி பணிப்பாளர் அ.குமாரவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கி வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ந.சிவரட்ணம், இலங்கை மேற்தரக்கிளை சிரேஷ்ர முகாமையாளர் இ.விஜயசிங்கம், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி ரூபினி வரதலிங் கம், வைத்திய கலாநிதி ந.சிவராசா , ஆணைக் கோட்டை கிராம உத்தியோகத்தர் ச.சந்திரராஜா, சட்டத்தரணி மா.தியாகராசா , மா.மகாலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

## விளையாட்டுப் போட்டி

வல்வெட்டித்துறை, கணபதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் வீதியில் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கணபதி படிப்பகத் தலைவர் பு.அகமணிதேவர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக வல்வெட்டித்துறை நகரசபை செயலாளர் கு.அமிர்த லிங்கம், யாழ்.சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ப.யோகராஜா, வல்வை மகளிர் மகா வித்தியாலய அதிபர் திருமதி கு.நகுலாம்பிகை, வடமராட்சி முன்பள்ளி வலய இணைப்பாளர் திருமதி சு.சுரேஸ், பருத்தித்துறை முன் பள்ளி பிரதேச இணைப்பாளர் திருமதி த.இரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)



நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஸ்ரீ அம்மா பகவான் சத்சங்க ஆரம்பவிழாவில் தலைமை தாங்கிய பூ.சந்திரகுமாரன் அம்மா பகவான் திருவுருவப்படத்திற்கு தீபாராதனை செய்வதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பக்தர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# நோத் முதல் கோபல்லவா வரை 17



## ஆள்பதி நோத் அவர்கள்

கிளே கோன் பிரதம காரியதரிசியாகத் தமக்குக் கிடைத்தமை தமக்குப் பெருமை என்றே ஆள்பதி முதலிற் கூறினார். கிளே கோன் அவர்களும் வெகு திறமையாகத் தமது உதவியாளரைக் கூட நெருக்காமல் தாமே பாரிய வேலைகளைச் செய்துவந்தார். சில காலஞ் செல்ல ஆள்பதி அவர்களுக்குக் கிளே கோன்மீது சந்தேகம் ஏற்படலாயிற்று. அவர் சென்னை வர்த்தக சங்காத்தாருடன் சேர்ந்து தம்மை வஞ்சிக்க முனைந்தார். என ஆள்பதி கருதினார். ஆராயாமல் ஒரு வரை நம்பு வதும், நம்பிக்கை வைத்தபின் அவர் மேற் சந்தேகப் படுவதும் நீங்காத துன்பத்தைத் தரும் என்பது திருவள்ளுவர் கருத்து. அதனை அவர்

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்"

என்னும் குறளில் கூறியுள்ளார்.

கிளே கோனுக்கும் தமக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டதும் கிளே கோனைக் கண்டியரசவையில் தானிகராக நியமிக்கவும் ஆள்பதி எண்ணினார். ஆனால் கிளேகோன் அந்நிய மனத்தை அறவே வெறுத்தார். அதனால் அவர் மீது மேலும் சந்தேகம் கொண்ட ஆள்பதி அவர்கள் கிளே கோனை வேலையிலிருந்து தடுத்து வைத்தார். அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத கிளே கோன் வேலையை விலகல் செய்து விட்டு வெளியேறி விட்டார்.

ஆள்பதி அவர்கள் திருகோணமலையில் இருந்த கறே அவர்களோடு அவர் நடத்தை காரணமாகவும், கம்பெயின் அவர்களோடு சாராயக் குத்தகை காரணமாகவும் முரண்பட்டார். கொழும்பிலிருந்த அதிபரின் உதவியாளரான மக்டோவல் முத்துக் குளிப்பாலும் அரிசி இறக்குமதியாலும் கொள்ளை இலாபம் அடைந்தார். என்று கண்டு அவரையும் வேலையிலிருந்து நிறுத்திவைத்தார். அவருடைய குற்றங்கள் அதிகமெனக் கண்டு அவரை வேலையினின்றும் விலத்தி அவர் உத்தியோகத்தை பொயிட் என்பாருக்கு வழங்கினார். இவ்வாறே பெரிய உத்தியோகத்தர் பலரும் பொருள் தேடும் ஊக்கத்தால் பல பிழைகள் செய்வாராயினர். இவர்கள் செய்த பிழைகளை ஆராயும் நோக்கமாக நியமிக்கப்பட்ட ஆணைச் சபை கிளே கோன் முதலானோரை வேலையினின்றும்

### மீள் பார்வை

நீக்கும் வண்ணம் தீர்ப்பளித்தது. எனவே கிளே கோனின் பிரதம காரியதரிசிப் பொயிட் அவர்களுக்கே வழங்கப்படலாயிற்று.

முத்துக் குளிப்பால் பணந் தேடிய குற்றத்துக்கு அண்றூஸ் அவர்கள் விலக்காக இருக்கவில்லை. அவர் மீது குற்றம் உண்டென்று ஆள்பதி எழுதியதும் சென்னை வர்த்தக சங்கத்தார் அண்றூஸ் அவர்களை வேலையினின்றும் விலத்தி விட்டனர். இவ்வாறாக விலத்தப்பட்டவரும், விலகிப் போனவரும், இயற்கை மரணமடைந்தவருமாகச் குற்றவாளிகளான உத்தியோகத்தர் போயகல ஆள்பதி அவர்கள் தமது திருத்தங்களை நல்ல முறையிற் செய்வாராயினர்.

இலங்கையின் வருமானத்தையும் வர்த்தகத்தையும் கண்காணிப்பதற்கு நோத் அவர்கள் 28.04.1801 இல் ஒரு சங்கத்தைத் தாபித்தார். அதில் பிரதம காரியதரிசி, உதவிக் காரிய தரிசி, கொழும்பு, காலி ஆகிய இடங்களின் வரி அதிபர், கணக்காளர் முதலிய உத்தியோகத்தர் இருந்தார்கள். கலெக்டர் எனப்பட்ட வரி அதிகாரப் பதவிகள் நீக்கப்பட்டு மாவட்ட அதிபர் பதவிகள் ஏற்படுத்தப்படலாயின. அதிபர்கள் வருமானத்தையும் வர்த்தகத்தையும் மேற்பார்வையிடவும். அவர்களுக்கு மாதாந்தம் குறிக்கப்பட்ட வேதனம் வழங்கவும் அதனோடு அவர்கள் திரட்டும் வரியில் 2% கழிவு பெறவும் திட்டமிடப்பட்டது.


யாழ்ப்பாணத்தில் நியமனம் பெற்ற பாபற் அவர்கள் சங்கத்தில் இடம் பெறவில்லை. அவருடைய பரிபாலனத்தில் புத்தளம், மன்

**க.சி.குலரத்தினம்**

னார் , யாழ்ப்பாண பட்டினம், முல்லைத்தீவு, வன்னி முதலாய மாவட்டங்கள் அடங்கின.

முன்னர் 2 -8 -1800இல் செய்யப்பட்ட பிரசித்தத்தின் வண்ணம் ஓர் அளவையாளர் திணைக்களம் நிறுவப்படலாயிற்று. அதன் நாயகமாக் யோசேப் யோயின் வில் முதன் முதலாக நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவி நாயகங்களாக நீர்கொழும்பு, கொழும்பு, மாத்தறை,திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் அளவையாளர் நியமனம் பெற்றனர். இன்னும் வீதிகள், பாலங்கள், முதலிய போக்குவரத்து வசதிகளைக் கவனிப் பதற்குப் பகிரங்கவேலைத் திணைக்களம் ஒன்று நிறுவப்பட்டது. அதன் தலைவராய் எஞ்சினியர் கொற் கிறேவ் நியமிக்கப்பட்டார். இன்னும் 01-03-1801 இன் பிரசித்தத்தின் வண்ணம் காணிப்பதிவு அலுவலகமும் நிறுவப்பட்டது. அக்காலத்தில் பெரியம்மை நோய் இலங்கையில் அதிகம் பரவியதால் வைத்திய பகுதியினரால் கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் வைத்தியசாலைகள் நிறுவப்பட்டன. அவற்றைத் தொடர்ந்து காலியிலும் ஒரு வைத்தியசாலை நிறுவிய போது இலங்கையில் 12 வைத்தியசாலைகளை நிறுவ முயன்றனர். இலங்கையில் அக்காலத்தில் சுகாதாரத்தின் பொருட்டு வருடச் சராசரி 9 ஆயிரம் பொன் செலவாயிற்று.

(தொடரும்)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் பிரிவில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் நடாத்தப்பட்ட கிரிக்கெற் போட்டியில் சாம்பியனான இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழக வீரர்கள் இளைஞர் சேவை மன்ற அலுவலர் ஐ.தபேந்திரன் நடுவர்கள் முகாமையாளருடன் நிற்பதை முதலாவது படத்திலும் தடகளப்போட்டியில் வெற்றியீட்டிய வீராங்கனைகள் யாழ்.மாவட்ட இளைஞர் சேவை மன்ற உதவிப்பணிப்பாளர் ரீ.சிவதெட்சணாமூர்த்தி இளைஞர் சேவைமன்ற அலுவலர் ஐ.தபேந்திரன் ஆகியோருடன் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (பரு. நிருபர்)



பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமத்தின் சிறுவர் சத்துணவு விநியோகத்திட்டத்தின் கீழ் துன்னாலை வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்குப் பசும்பால் வழங்கும் திட்டத்தை புனர்வாழ்வு இணைப்பதிகாரி எஸ்.பாலச்சந்திரன் ஆரம்பித்து வைப்பதையும் சுவாமி சித் ரூபானந்தா அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (52)

## முஷாரப்பை பதவியிலிருந்து அகற்றாவிட்டால் நவாஸும் நானும் சிறையிலடைக்கப்பட நேரிடும்

### அஸிப் அலி சர்தாரி தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பை பதவியிலிருந்து அகற்றத் தவறும் பட்சத்தில் தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்புடன் இணைந்து சிறைவாசம் அனுபவிக்க நேரிடும் என பாகிஸ்தான் மக்கள் கட்சியின் இணைத்தலைவர் அஸிப் அலி சர்தாரி தெரிவித்தார்.

நவாஸ் ஷெரீப்பின் "பி.எம்.எல்.என்" கட்சியுடனான பாகிஸ்தான் மக்கள் கட்சியின் கூட்டிணைப்பின் ஸ்திரத்தன்மையை குலைக்க சில சக்திகள் முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டிய சர்தாரி, அவ்வாறான நிலை ஏற்படவில்லை என கூறினார்.

மேற்படி சக்திகளின் முயற்சிகளுக்கு மாறாக ஆளுங் கூட்டமைப்பானது மென்மேலும் வலுவடைந்து வருவதாக கூறிய சர்தாரி, பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையிலான அரசாங்கமானது நாட்டின் நிர்வாகத்தைப் பொறுத்த வரைமையத்தில் திகழும் என்று



தெரிவித்தார். சிந்து மாகாணத்திலுள்ள நவசபாவில் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்நிலையில் பாகிஸ்தான் மக்கள் கட்சியானது முஷாரப்பை பதவியிலிருந்து அகற்றுவதற்கு ஏனைய கூட்டமைப்பு கட்சிப் பங்காளர்களுடன் இணைந்து தந்திரோபாய நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ளதாக சர்தாரி கூறினார். (அ)

## நவாஸ் ஷெரீப் தேர்தலில் போட்டியிட பாகிஸ்தான் நீதிமன்றம் தடை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நடக்கவுள்ள இடைத்தேர்தலில் போட்டியிட முன்னாள் பிரதமரான நவாஸ் ஷெரீப் அவர்களுக்குத் தகுதியில்லை என்று பாகிஸ்தானிய நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஆளும் கட்சி கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான ஷெரிப் அவர்கள் 1999 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நீதிமன்றத்தீர்ப்பின் மூலம் தேர்தல்களில் போட்டியிடத் தடை செய்யப்பட்டுள்ளார்.

ஆனால் பின்னர் இந்த வாரத்தில் நடக்கவுள்ள தேர்தலில் அவரை அனுமதிக்க தேர்தல் ஆணையம் ஒப்புக்கொண்டது போன்று தென்பட்டது.



ஆனால் இப்போது லாகூரில் உள்ள நீதிமன்றம் ஒன்று அவர் அந்த தேர்த லில் போட்டியிடத் தகுதியற்ற வர் என்று தீர்ப்பளித்துள்ளது. இந்த தீர்ப்பு ஷெரிப் அவர்களுக்கு அரசியல் ரீதியில் ஒரு பெரும் பின்னடைவு என்று பார்க்கப்படுகிறது. (அ)

## இஸ்ரேலிய குடியேற்றம் நிறுத்தப்படாதவரை மத்திய கிழக்கில் அமைதி ஏற்படாது

### பிரெஞ்சு அதிபர் தெரிவிப்பு



இஸ்ரேல் மேற்கு கரைப்பகுதியில் குடியேற்றம் நிமித்தம் கட்டிடங்களை கட்டுவதை நிறுத்தாதவரையில் மத்திய கிழக்கில் அமைதி ஏற்படாது என இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில உரையாற்றும் போது பிரெஞ்சு அதிபர் நிக்கொலா சர்கோஸி தெரிவித்துள்ளார். தீவிரவாதத்துக்கு எதிராக பாலஸ்தீனியர்கள் மேலும் பங்காற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொண்ட அவர் இஸ்ரேல் பாலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளுக்குமான தலைநகராக ஜெரூசலத்தை அங்கீகரிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளார். அணு ஆயுத வல்லமை வாய்ந்த ஈரான் ஏற்றுக் கொள்ள முடியாதது எனவும் நிக்கோலா சர்கோஸி அவர்கள் மேலும் கூறியுள்ளார். பிரெஞ்சு அதிபர் ஒருவர் 12 ஆண்டுகளில் இஸ்ரேலுக்கு செல்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## சிம்பாப்வேயின் எதிர்கட்சித்தலைவர் டச்சு தூதரகத்தில் அடைக்கலம்



சிம்பாப்வேயில் எதிர் கட்சித் தலைவரான மார்கன் சாங்கிராய் நாட்டில் நடை பெறவுள்ள அதிபர் தேர்தலுக்கான மறுவாக்குப் பதிவிலிருந்து விலகுவதாக அறிவித்தல் சிலமணி நேரங்களில், அவர் தமது தூதரகத்தில் அடைக்கலம் புகுந்துள்ளதாக டச்சு அரசு கூறியுள்ளது.

சாங்கிராய் அவர்கள் தஞ்சம் கோரவில்லை என்றாலும் தமது பாதுகாப்பு குறித்து அச்சம் காரணமாகவே அவர் இரவுப் பொழுதை அங்கு கழித்தார். எனக் கூறியுள்ள டச்சு அரசு அவர் விரும்பினால் நீண்டகாலம் தங்கியிருக்கலாம் எனவும் கூறியுள்ளது.

டச்சு அரசின் இந்த அறிவிப்பு வெளியாவதற்கு சற்று முன்னர் தலைநகர் ஹராரேயில் உள்ள சாங்கிராய் அவர்களின் கட்சித் தலைமையகம் மீது சிம்பாப்வேயின் பொலிசார் அதிரடி சோதனையை நடத்தினார்கள்.

சோதனைக்குள்ளான அந்தக் கட்டிடத்தில் தங்கியிருந்த அறுபதுக்கும் மேலானவர்கள் பெரும்பாலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர் என ஜனநாயக மாற்றத்துக்கான இயக்கத்தின் சார்பில் பேசவல்ல ஒருவர் தெரிவித்துள்ளார். (அ)

## சிம்பாப்பே நிலைமை குறித்து ஆபிரிக்க ஒன்றியம் கவலை



சிம்பாப்வேயில் இடம் பெற்று வரும் நிகழ்வுகள் குறித்து தனது ஆழ்ந்த கவலையயை ஆபிரிக்க ஒன்றியம் தெரிவித்துள்ளது. இது குறித்து என்ன செய்ய முடியும் என்பது குறித்து தாம் மற்ற ஆபிரிக்க தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி வருவதாக ஆபிரிக்க ஒன்றிய ஆணையத்தின் தலைவரான ழான் பிங் கூறியுள்ளார். இந்த நெருக்கடியை தீர்க்கும் முகமாக, ஆபிரிக் ஒன்றியமும், பிராந்திய அமைப்பான தென் ஆபிரிக்க வளர்ச்சி கவுன்சிலும் ராபர்ட் முகாபே மீது அழுத்தத்தை அளிக்க வேண்டும் என எதிர்கட்சியான ஜனநாயக மாற்றத்துக்கான அமைப்பு கோரியுள்ளது. (அ)


# தரம் -5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் 6

பகுதி –I
நேரம் – 45 நிமிடம்


செல்வி தே.தேவரத்தினம்
யாழ்ப்பாணக் கல்லூரி.

**01. தரப்பட்டுள்ள உருக்களில் விரைவில் அழியக்கூடிய உருவத்தை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக?**



1 2 3 4

**02. தரப்பட்டுள்ள உருக்களில் வித்தியாசத்தைத் தெரிவு செய்து கோடிடுக.**



1 2 3 4

**மிகவும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக?**

03.இரவு வானத்தில் சந்திரன்முழுமையாகத் தெரியும் நாள்
1) அமவாசை 2)பௌர்ணமி 3) அட்டமி

04.பம்பரம் என்ற சொல்லை எண் குறியீட்டினால் எழுதினால் சரியானது?
1) 21431 2) 71213 3) 75735

05.31 நாட்களைக்கொண்ட ஒரு மாதத்தின்5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எனின் அம மாதத்தின் 3 ஆம்திகதி என்ன கிழமையாக இருக்கும்?
1) திங்கட்கிழமை 2) சனிக்கிழமை 3) ஞாயிற்றுக்கிழமை

06. எனது தந்தையின் சகோதரனின் தந்தையின் மனைவி எனது தந்தைக்கு என்ன முறை?
1) சகோதரி 2) தாய் 3) பேத்தி

**கீறிட்ட இடங்களில் வரவேண்டிய பொருத்தமான சொல்லை தரப் பட்டுள்ள விடையிலிருந்து தெரிவு செய்க.**

மிக வேகமாக சென்ற பேரூந்து 07) ......................................வந்த இன்னொரு
08 . .............. ..............மோதியதால்.

07)
1) பின்னால்
2) மேலால்
3) முன்னால்


08)
1) காருடன
2) பேருந்துடன
3) லொறியுடன்

அதன் கண்ணாடிகள் 09.................. துடன் அதன் 10. ........... காயமடைந்தார்.

09)
1) நெருங்கிய
2) உடைந்த
3) நெளிந்த

10)
1) மாலுமி
2) சாரதி
3) விமானி

11. உயிருள்ளவை, மிருகம், மான் என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்கு பின்வரும் எந்த உரு பொருத்தமாகும்?




**மிகச் சரியான கருத்துள்ள வாக்கயத்தின் கீழ் கோடிடுக.**


12. 1) கீழே விழுந்த பட்டம் காற்றில் அசைந்தாடியது.
2) காற்றில் கீழே விழுந்த பட்டம் அசைந்தாடியது.
3) காற்றில் அசைந்தாடிய பட்டம் கீழே விழுந்தது.


13. 1) பசியோடு இருந்த நாய் முயலைத் துரத்தியது.
2) பசியோடு இருந்த முயல் நாயைத் துரத்தியது.
3) நாய் பசியோடு இருந்த முயலைத் துரத்தியது.

14. ஒரு மனிதன் தனது வீட்டிலிருந்து வடக்கு நோக்கி 150மீற்றர் சென்று அவ்விடத்தில் திரும்பி கிழக்கு நோக்கி 100மீற்றர் சென்றான். அதன் பின்னர் தெற்கு நோக்கி மீண்டும் 150 மீற்றர் சென்று அவ் விடத்தால் திரும்பி மேற்கு நோக்கி 75 மீற்றர் சென்றான் இப்போது அவன் வீட்டிலிருந்து எவ் வளவு தூரத்தில் நிற்கிறான்.
1) 100மீ 2) 25மீ 3) 75மீ


15. ரமணியின் வயது ரூபிணியின் வயதின் அரைவாசியாகும். ரூபிணியின் வயது தர்சினியின் வயதின் அரைவாசியாகும். மூவரினதும் வயதினதும் மொத்தம் 35 ஆண்டுகள் எனின் தர்சினிக்கு எத்தனை வயது?
1) 15 வருடங்கள் 2) 18வருடங்கள் 3) 20வருடங்கள்.

16. ஒட்டப்பட்டுள்ள இச்சதுரமுகி உருவை விரிக்கும் பொழுது தோன்றும் சரியான உரு எது?





17. முதலில் தரப்பட்ட உருக்களை அவதானித்து அடுத்துவரும் உருவை தெரிக.




1 2 3

18. அருண் பாடசாலைக்கு அருகில் வசித்து வந்தான். எனினும் அவன் பல நாட்களாகப் பாடசாலைக்குச் சமூகமளிக்கவில்லை. அவன் பாடசாலைக்குக் சமூகமளிக்காததற்கு காரணமாக இருக்கக்கூடியது எது?
1) அது பாடசாலை விடுமுறை நாளாக இருந்தமை
2) அருண் சுகவீனமுற்று இருந்தமை
3) பாடசாலை பஸ் வராதிருந்தமை

19. கமலன் முயற்சியோடு பாடங்களைப் படிக்கும் பிள்ளையான போதிலும் கடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை. அவன் சித்தியடையாமைக்குக் காரணமக இருக்கக் கூடியது எது?
1) கமலன் மீது ஏனைய மாணவர்கள் பொறாமை கொண்டிருந்தமை.
2) பரீட்சையின் போது கமலனால் சரியான விடைகளை எழுத முடியாமல் இருந்தமை.
3) கமலன் நினைத்ததை விட வினாத்தாள் இலகுவாக இருந்தமை.

20. உருவைப் பார்த்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



1 2 3

21. ஒரு பண்ணையிலுள்ள பிராணிகளின் விபரம் பின்வருமாறு இருந்தன.

| | |
|---|---|
| பறவைகள் -20 | பால்தராதமிருகங்கள்-15 |
| முட்டையிடும்பறவைகள் -10 | பால்தரும் மிருகங்கள் - 8 |

இதன்படி பண்ணையிலுள்ள பிராணிகளின் மொத்த எண்ணிக்கை.
1) 35 2) 43 3) 53

22. பசி : உணவு எனின் நோய் :.......:....
1) வைத்தியர் 2)மருந்து 3) ஓய்வு

23. வெளிச்ச: நிழல் எனின் ....... ....... வெள்ளம்
1) மழை 2)உதவி 3) படகு

**முதலிரு வரிசைகளிலும் காணப்படும் தொடர்பை அவதானித்து வெற்றி டத்தில் பொருத்தமான விடையை எழுதுக.**

24. தகனம் ⟶ கானம்
யவனம் ⟶ வானம்
வதனம் ⟶ ...............

25.7854 ⟶ 7584
3421 ⟶ 3241
1769 ⟶ ..................

26. வேலையொன்றை 6மனிதர்கள் 12 நாட்களில் செய்து முடிப்பர் எனில்,2 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?
1) 6 நாட்கள் 2) 18நாட்கள் 3) 36நாட்கள்

27.மழையுடன் மின்னலும் ஏற்படும் வேளையில் எம்மைப் பாதுகாக்க நாம் செய்ய வேண் டியது?
1) உலோகப் பொருட்களைத் தொடுவதைத் தவிர்தல்
2) தொலைக்காட்சியைப் போட்டு காலநிலை அவதான நிலையச் செய்தி ஏதும் கிடைக்கிறதா எனப் பார்த்தல்.
3) வானொலியின் சத்தத்தைக் குறைத்து விடல்

**சம்பவம் தொடர்பான உரையாடல் ஒழுங்கு மாறிக் காணப்படு கின் றது. திருத் தமாக அமைத்தால் அமையும் சரியான விடையினைத் தெரிவு செய்க.**

28.சுற்றுலாவுக்கு சென்று விட்டு வீடு திரும்பிய மகனுக்கும் அவனது தந்தைக்கும்இடையே நிகழ்ந்த உரையாடல் வருமாறு

A- அனேகமாக அங்கே எல்லாப் பிராணிகளையும் பார்க்க முடிந்தது.
B-நீங்கள் தெஹிவளை மிருகக்காட்சி சாலைக்குச் சென்றீர்களா?
C-அதிலும் யானைகளின் நடனமும் சாகசங்களும் என்னை மிகவும் கவர்ந்ததாக இருந்தது?
D-அங்கே எவற்றையெல்லாம் பார்த்தீர்கள்?
E-ஆமாம் அப்பா கொழும்பில் நாம் முதல் சென்று பார்த்த இடம் அது தான்.

1) EBAC 2) BDECA 3) BEDAC

29.தரப்பட்டுள்ள உருவக் குறியீடுகளுக்குரிய பெறுமானங்களைக் கணித்து வினாவுக்குரிய சரியான விடையை எழுதுக.

△ + △ = 10

△ x ○ = 10

□ - ○ = △ இதற்கேற்ப □ இதன் பெறுமதி யாது? ..............................

**சரியான விடையைத் தெரிந்து கீறிடுக**

30. 10முட்டைகள் அவிய 10 நிமிடங்கள் எடுத்தது எனில் அதில் 2 முட்டை அவிய எத்தனை நிமிடங்கள் எடுக்கும்?
1) 10 நிமிடம் 2) 20நிமிடம் 3) 2நிமிடம்

31. தாவரம் ஒன்றுக்கு மாத்திரம் உள்ள இயல்பு எது?
1) காற்றுக்கு அசைதல் 2) நிழல் தருதல் 3) வளர்தல்

**பின்வரும் பாடலை அவதானித்து ,அதன் கீழ் உள்ள வினாக்களுக்குரிய பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

எத்தனை நாள் பாடியும்
ஏனோ நீயும் வரவில்லை
சத்தம் போட்டுப் பாடியும்
சற்றும் நெருங்கி வரவில்லை
உன்னை விரும்பி அழைத்துமே
ஓடி நீ வராததல்
விண் கலத்தில் ஏறியே
விரைவில் வருவோம் உன்னிடம்.

32.இப்பாடலில் குறிப்பிடப்படுவது எதைப் பற்றி?
1) சூரியன் 2) சந்திரன் 3) மல்லிகை

33.சந்திரன் முழுமையாகத் தெரியாத நாள்?
1) பௌர்ணமி 2) அமாவாசை 3) மாதத்தின்10 ஆம் திகதி

34.ஒரு நகரத்தில் விசர் நாய்கடியினால் அதிகமானோர் இறந்தனர். இதற்குரிய காரணமாக இருக்கக்கூடியது.
1) சகல வீடுகளிலும் நாய்கள் வளர்க்கப்படல்
2) விசர் நாய்க்குரிய தடுப்பூசி நாய்களுக்கு வழங்கப்படாமை
3) எல்லா நாய்களையும் கொல்லாதிருத்தல்


**பின்வரும் பழமொழிகளின் கருத்தினை உணர்த்தும் கூற்றினைத் தெரிவு செய்க.**

35. "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" இதன் கருத்து
1) எதையும் தொடர்ந்து செய்யும் பொழுது அதில் ஆர்வம் குறையும்
2) எதையும் உரிய வேளையில் செய்ய வேண்டும்
3) பல தடவைகள் முயன்றால் கடினமான காரியமும் கைகூடும்.

36. "ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு " என்பதன் கருத்து
1) ஆற்றிலே போடுவதற்கு அளவு தெரிய வேண்டும்
2) எந்தச் செலவு செய்யினும் அதன் கணக்கை அறிந்திருத்தல் வேண்டும்
3)ஒன்றின் இயல்பை அறிந்து அதனில் ஈடுபட வேண்டும்


**எண் தொடர்பினை அவதானித்து பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

37



1) 3 2) 4 3) 5

38.



1) 33 2) 28 3) 38

**ஒவ்வொரு புதி ரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து அதனைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

39. இது மூன்று எழுத்துக்கள்ளக் கொண்ட சொல்லாகும்.
முதலெழுத்து அவலில் உண்டு அயலில் இல்லை
இரண்டாம் எழுத்து கரத்தில் உண்டு களத்தில் இல்லை
மூன்றாம் எழுத்து கும்மியில் உண்டு குடும்பில் இல்லை (....................................)

40. முதல் எழுத்து அம்மியில் உண்டு இம்மியில் இல்லை
இடை எழுத்து கன்னியில் உண்டு கணனியில் இல்லை
கடைசி எழுத்து புகழில் உண்டு இகழில் இல்லை (....................................)

ஒருவனை நன்றி கெட்டவன் என்று சொல்லிவிட்டால் போதும். அதற்கு மேல் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

-இத்தாலி

வலம்புரி

# வைத்திய நிபுணர்களின் நியாயமான கோரிக்கை

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கல்வி பயின்று மருத்துவப் பட்டத்தை நிறைவு செய்பவர்கள் குறிப்பிட்ட காலப்பகுதிக்கேனும் யாழ்ப்பாணத்தில் பணியாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை யாழ்.போதனா வைத்திய சாலையின் வைத்திய நிபுணர்கள் முன்வைத்துள்ளனர்.

வைத்திய நிபுணர்களால் முன்வைக்கப்பட்ட இக்கோரிக்கை நியாயமானதும்,ஏற்புடையதுமாகும்.

பொதுவாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மருத்துவ பட்டத்தை நிற்றவு செய்தவர்கள் பட்டச் சான்றிதழை பெற்ற கையோடு வெளிநாடுகளுக்கு அல்லது நாட்டின் தலை நகரங்களுக்குச் சென்று அங்கு பணியாற்றவே விரும்புகின்றனர்.

இதில் சிலர் விதிவிலக்காயினும், பலரின் முடிவு இதுவாகவே உள்ளது.

யாழ்ப்பாண மண்ணில் இருந்து அந்த மண்ணிலேயே கற்று யாழ்.போதனா வைத்திய சாலையில் யாழ்ப்பாண மக்களின் உடலை சோதனை செய்து கற்றுத் தேர்ந்த பின்னர் வசதியான -வளமான இடங்களிற்குச் சென்று அங்கு மருத்துவ சேவையாற்றுவதென்பது நன்றி மறந்த செயலாகும்.

யாழ்ப்பாணத்தில் மருத்துவ பட்டத்தை நிறைவு செய்பவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கேனும், தாங்கள் பிறந்த மண்ணுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற கோரிக்கை பொதுவாக -மனிதாபிமான அடிப்படையில் விடுக்கப்பட்டபோதிலும் அவை நிராகரிக்கப்பட்டதுடன், நீங்கள் ஆய்வு கூடத் தவளைகள்; நாங்கள் ஆய்வாளர்கள். எங்கள் ஆய்வு முடிபடைந்ததும் நாங்கள் உயர் பொருளாதாரம் நோக்கிய பயணத்தை தொடருவோம் என்பதுபோல யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பட்டத்தை நிறைவு செய்த பலர் நடந்து கொண்டனர்.

இந்நிலையில்,யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மருத்துவப் பட்டத்தை நிறைவு செய்பவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கேனும் சொந்த மண்ணில் பணியாற்ற வேண்டுமென்ற கருத்தும், கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையை முன்வைத்தவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல.

அவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இயங்கு நிலைக்கு இவர்களின் வகிபங்கு முக்கியமானதாகும்.

எனவே வைத்திய நிபுணர்கள் விடுத்த நியாயமான கோரிக்கைக்கு மருத்துவ பீட மாணவர்கள் நிச்சயம் செவிசாய்த்தாகவேண்டும் என்பதால் எதிர்காலத்தில் மருத்துவ சேவையில் ஓர் புதிய திருப்பத்தை யாழ்ப்பாண மண் சந்திக்குமென நம்பலாம்.

# திருமலை அக்சன் பெய்ம் நிறுவனப் பணியாளர் கொலை தொடர்பில் சர்வதேச விசாரணை

## நடவடிக்கை மேற்கொள்ள பிரான்ஸ் உறுதி

(கொழும்பு)

திருகோணமலை மூதூர் அக்சன் பெய்ம் நிறுவனத்தின் 17 பணியாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக சர்வதேச விசாரணைக்கான முனைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரான்ஸ் அரசாங்கம் இது தொடர்பில் ஏனைய நாடுகளின் உதவியைக் கோரியுள்ளது.

இது தொடர்பில் அக்சன் பெய்ம் நிறுவனம் விடுத்த வேண்டுகோளுக்கு பிரான்ஸின் வெளியுறவு அமைச்சர் போனாட் குச்சினர் தமது உறுதியை வழங்கியுள்ளார். அவ்வாறான சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் அக்சன் பெய்ம் நிறுவனத்திற்கு உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்வரும் யூலை முதலாம் திகதியன்று நடைபெறவுள்ள ஐரோப்பிய ஒன்றிய கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது.

இந்நிலையில் பிரான்ஸ் அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் இதற்கான தெளிவாக்கல் நிகழ்வுகளை சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட வுள்ளதாக அக்சன் பெய்ம் நிறுவன ஊடக அதிகாரி லூசிலி குரொஸ்ஜின் தெரிவித்துள்ளார்.

(அ)

# போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய அனைவரையும் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தமை தவறாகும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாடசாலை அதிபர் சேவை மூன்றாம் தரத்திற்காக புள்ளிகள் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைகளை நடத்தாது மேல் மாகாணத்தில் போட்டிப் பரீட்சையில் தோற்றிய 3,700 பேரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்நடவடிக்கையானது அதிபர் சேவை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை மீறும் செயலாகுமென இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டுகிறது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்ததாவது,மேல் மாகாணத்தில் அதிபர் சேவை மூன்றாம் தரத்திற்காக 3,700 பேர் போட்டிப் பரீட்சையில் தோற்றினர். தற் போது இவர்கள் அனைவருக்கும் நேர் முகப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. இது பிழையான நடவடிக்கையாகும். போட்டிப் பரீட்சைகளில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படும்.

இது அதிபர் சேவைக்கு இணைத் துக்கொள்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாட்டினால் அரசியல் தலையீடுகளும் அதிகரித்துள்ளன.

அதுமட்டுமன்றி 3,700 பேருக்கும் நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்களை அனுப்ப பாரிய தொகை செலவிடப் பட்டுள்ளது. ஒரு கடிதத்திற்கு ரூபா 30வீதம் செலவிடப் பட்டுள்ளது.

ஒருவரை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்துவோருக்கு ரூபா 200வீதம் வழங்கப்படுகிறது. இவையெல்லாம் வீண் செலவாகும்.

நாடு முழுவதும் உள்ள 9,728 அரசாங்க பாடசாலைகள் பலவற்றில் அதிபர் பதவிகள் வெற்றிடங்களாக உள்ளன. இதுவரையில் அவை நிரப்பப்படவில்லை.

(அ)

# ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் உள்ளிட்ட மூவரினதும் விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஜே.எஸ்.திஸ்ஸநாயகம் மற்றும் வெற்றிவேல் யசீகரன், வடிவேல் வளர்மதி ஆகியோரின் விளக்கமறியல் எதிர்வரும்30ஆம் திகதி வரை நீடிக்கப்பட் டுள்ளது.



விளக்கமறியல் நீடிப்பதற்கான உத்தரவினை கொழும்பு பிரதான நீதிவான் நிசாந்த அப்பு ஆராய்ச்சி வழங்கினார். ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸ்ஸநாயகம் உள்ளிட்ட மேற்படி மூவரும் கடந்த ஏப்ரல் மாதம் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு ஒத்திவைக்கப்பட்டிருந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிவான் இவ்வாறு உத்தர விட்டார்.

ஊடகவியலாளா ஜே.எஸ்.திஸ்ஸநாயகம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தின் உத்தரவை பெற்றுக் கொள்ளாது திஸ்ஸநாயகம் 90 நாட்களுக்கு மேலாக தடுத்துவைக்கப்பட்டுள்ளார். இது அவசர காலச் சட்டத்திற்கு எதி ரான நடவடிக்கையாகும். என்று சுட்டிக் காட்டினார் விசாரணைகளை அவதானித்த நீதிவான் சந்தேக நபர்கள் மூவ ரின் விளக்கமறியலை எதிர்வரும் 30ஆம் திகதி வரை நீடிக்குமாறு உத்தர விட்டார்.

(அ)

# சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் தமிழ் மக்கள் விடுதலைபுலிகள்

(கொழும்பு)

பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுக்கூட்டத்தில் பங்குபற்றும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் பெயர்கள் இவ்வாரம் அறிவிக்கப்படவுள்ளதாக அக்கட்சியின் பேச்சாளர் அசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் சிவனேசதுறை சந்திரிரகாந்தன் இவ்வாரம் குறித்த நபர்களின் பெயர்களை உத்தியோக பூர்வமாக அறிவுப்பார் எனவும் அவர் கூறினார்.

அரசியல் தீர்வுகான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் தீர்வுத் திட்டம் அடங்கிய ஆலோசனையுடன் தங்களது பிரதிநிதிகள் இக் குழு வில் இணையவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். சர்வகட்சி பிரதிநிதிகள்குழுவில் கலந்து கொள்ளும் தமிழ் மக்கள் விடு தலைப் புலி களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டவுடன் சர்கட்சி பிரதிநிதிகள் கூட்டம் உடனடியாக கூட்டப்படுமென அமைச்சர் திஸ்ஸ விதா ரன தெரிவித்தார்.

(அ)

ஓலைச் சுவடிகள் 50

# தெரிந்த கதையும் தொரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

## பறவைகள் பாடுவது மகிழ்ச்சியடையும் போதா?

சந்தோசம் வரும் போதும் சந்தோசம் கூடும் போதும் பறவைகள் பாட்டு பாடுவதுண்டு என்ற நம்பிக்கை நம் நாட்டில் பல இடங்களிலும் நிலை கொள்ளுகின்றது.

ஆனால் சந்தோஷம் வரும் போது பறவைகள் பாடுவதாக பறவை நூல் நிபுணர்கள் எங்கேயும் எப்போதும் கூறியதில்லை.

இணையை ஈர்க்கும் பொருட்டு உண்டாக்கும் இனிமையான ஓசையை நாம் பாட்டு பாடுவதாக சிறப்பிக்கின்றோம். தாம் இருப்பதாக பிறரை தெரியப்படுத்தி அழைப்பதற்காகவும் பறவைகள் ஓசை எழுப்புகின்றன.

தொண்டையில் அமைந்திருக்கும் ஓர் சிறப்பு உறுப்பான சைரிங்க்ஸ் பயன்படுத்தியே பறவைகள் இவ்வாறு பாடுகின்றன.

தானிருக்கும் இடத்தை தன் ஆதிக்கத்துக்குள் இருக்கும் பறவைகளை வரவழைத்து கூட்டுவதற்காக சில நேரம் இப்படிப் பாடுவதாக பறவை நூல் வல்லுநர் கூறியுள்ளனர்.

பெண் பறவைகள் சில நேரம் பாடும் என்றாலும் பொதுவாக ஆண்பறவைகளே பாடுகின்றன. ஆண்பறவைகள் பாடும் போது பதிலளிக்கவே பெண் பறவைகள் பாடுகின்றன. தன் ஆதிக்கத்திற்குள்ளிருக்கும் பிரதேசத்தில் வேறு பறவைகள் நுழையும் போது அவற்றை எச்சரிப்பதற்காகவும் பறவைகள் விசேஷ ஓசைகள் எழுப்புகின்றன. பெண்பறவைகளை மிக அன்புடன் இனிமையாக அழைக்கும் ஓசையை அவைபாட்டாக கருதாவிட்டாலும் கேட்டுக் கொண்டிருக்கும் நாம் இதைப் பாட்டகச் சிறப்பிக்கின்றோம்.

# பயங்கரவாதத்துக்கு துணைபோக மாட்டோம்
# பொலிஸ்மா அதிபருக்கு, மனோகணேசன் கடிதம்

(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு தமது கட்சி ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது என மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



கொழும்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக கொழும்பு மாவட்டத்தில் பிரபல்யமான பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அலுவலகத்தில் முன்னர் வேலை செய்த நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்திருப்பதாக அரசாங்க ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கும் நடராஜா சிவராஜா என்பவர் கட்சியின் உறுப்பினராக வந்ததாகவும் அவர் சம்பளம் பெற்று வேலை செய்யவில்லையெனவும் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மனோ கணேசன் கூறியுள்ளார்.

சிவராஜா என்பவர் வெள்ளைவான் குழுவினரால் கடத்தப்பட்டு தற்பொழுது பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரின் கைதைத்தொடர்ந்து எனது பெயரையும் கட்சியையும் இதில் இணைக்கும் நோக்கில் தவறான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தக் கடிதம் உண்மை நிலைமையை உங்களுக்கு விளக்கும் என மனோகணேசன் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் மேலக மக்கள் முன்னணியின் உறுப்பினராகவே கட்சி அலுவலகத்துக்கு வந்திருந்தார். அவருக்கு கட்சி எந்த விதமான கொடுப்பனவுகளையும் வழங்கவில்லை. மேலக மக்கள் முன்னணி ஜனநாயகத்தை வேண்டிப் போராடிவருகிறது. பயங்கரவாதத்துடன் தொடர்புடைய எந்தவொரு நபருக்கும் எமது கட்சி ஆதரவு வழங்க வில்லை என மனோ கணேசன் கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்க்ள் தொடர்பாக கடந்த 1988 ஆம் ஆண்டு முதல் தான் குரல்கொடுத்து வருவதாகவும் இலங்கை அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளுடன் நெருங்கிச் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்திருந்தார். எனினும் இதுவரை பயங்கரவாதத்துடன் தொடர்புடைய எந்தவொரு நபரின் உதவியையும் பெற்றுக் கொள்ளவில்லை என பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

பதிவு செய்யப்பட்ட கட்சி என்ற ரீதியில் பொது மக்கள் கட்சி அலுவலகத்துக்கு வந்து செல்வது வழமையானது எனக் குறிப்பிட்டிருக்கும் மேல்க மக்கள் முன்னணியின் தலைவர் அலுவலகத்துக்கு வந்து செல்பவர்கள் தொடர்பான தகவல்களைத் தாம் சேகரிப்பதில்லையெனக் கூறியுள்ளார்.

அண்மைக் காலமாக சிவராஜாவின் நடவடிக்கைகள் திருப்திதரும் வகையில் அமைந்திராததால் அவரை கட்சி அலுவலகத்துக்குள் அனுமதிப்பதில்லை என கட்சியின் நிறைவேற்றுக்குழு தீர்மானித்திருந்ததாக அக்கட்சியின் தலைவர் மனோ கணேசன் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## விபுலானந்தாவில் மாணவர் போராட்டம் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் மரணம்

(திருகோணமலை)

திருகோணமலை விபுலானந்தா கல்லூரியில் உருவான பதற்ற நிலையினால் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பழைய அதிபரை பதவி மாற்றம் செய்து புதிய அதிபர் நியமிக்கப்பட்டதனை எதிர்த்து விபுலானந்தாக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் மேற்கொண்டு வந்தனர்.

இதேவேளை அதிபர் பதவியைப் பொறுப்பேற்கும் நோக்கில் பாடசாலை சென்றபோது அங்கு ஏற்பட்ட பதற்றநிலையினால் தாக்கமடைந்த 42 வயதான காளிதாஸ் என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த பாடசாலை அதிபர் ஓர் இருதய நோயாளி எனவும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# புலிகள் ஜனநாயக பிரவாகத்திற்கான வழியை முன்வைத்தால் ஆலோசிக்க அரசாங்கம் தயார்

## சமாதான செயலக பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை ஆயுதங்களை கைவிட்டு ஜனநாயக பிரவாகத்திற்குள் வரும் வழி குறித்து யோசனையொன்றை முன்வைத்தால் அதனை ஆலோசிப்பதற்கு அரசாங்கம் தயாராக விருப்பதாக அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் ரஜீவ் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் சமாதான பேச்சுவார்த்தைகளுக்குள் வரவேண்டும் என் றால் முதலில் ஆயுதங்கள்ள கீழே வைக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்ததைக்கு வரவேண்டும் என்ற எந்த வெளிப்பாட்டையும் இதுவரையிலும் வெளியிடவில்லை. புலிகள் சமாதான பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும் என்றால் நோர்வே அனுசரணையாளர்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேநேரம் பேச்சுவார்த்தை எனும் பெயரில் பேச்சுக்களை நடத்துவதனால் எவ்வித மான பயனும் இல்லை என்று சுட்டிக்காட்டியுள்ள அவர் புலிகள் முதலில் ஆயுதங்களை கைவிட்டு விட்டு ஜனநாயக பிரவாகத்திற்குள் வந்து அரசியல் தீர்வொன்றை காண்பதற்காக வழிமுறையொன்றை முன்வைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-5)

# குழந்தைக்கு பால் கொடுக்கும் போது அவதானமாக இருக்க வேண்டும்

(மாத்தறை)

குழந்தைகளுக்கு பாலூட்டும் தாய்மார்கள் மிக அவதானமாகவும் ஜாக்கிரதையாகவும் அதனைச் செய்யவேண்டும். இரவில் நித்திரை செய்து கொண்டே குழந்தைக்கு பாலூட்டுவதைத் தவிர்த்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு பால் ஊட்டுவதால் குழந்தையின் நுரையீரலில் பால் சிக்கி புரையேறி மரணம் ஏற்படுகின்றது என்று தெனியாய மரண விசாரணை அதிகாரி சுனில் பீ.ஹெட்டிகே மொறவக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொட்டபொலவரல்ல தோட்டத்தைச் சேர்ந்த கண்ணன் விஜேரத்னம் (2மாதம்) குழந்தையின் மரண விசாரணை தெனியாய அரச வைத்தியசாலையில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பலியான குழந்தையின் தாயாரான மரியா ஜெபமாலை மரியாள் சாட்சியளிக்கையில் கூறியதாவது,

காலஞ்சென்றுள்ள எனது குழந்தை மாத்தறை வைத்தியசாலையில் குறைமாதக் குழந்தையாகப் பிறந்தமையால் 10நாட்கள் கண்ணாடிப் பெட்டியில் வைத்திருந்தனர். அதனைத் தொடர்ந்து வீட்டிற்கு எடுத்துச் சென்றேன். சம்பவ தினம் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருக்கும் போது புரை ஏறியது. உடனே எனது கணவரும் நானும் மொறவக்க வைத்திய சாலைக்கு கொண்டு வந்தோம்.

ஆனால் அந்த குழந்தை இறந்துவிட்டதாக டாக்டர்கள் கூறினர்.

பால் புரை ஏறியதால் ஏற்பட்ட மரணம் என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெளிநாடுகளுக்குச் சென்று இலங்கைக்கு எதிராக செயற்படுவதை நிறுத்தவேண்டும்

## அஸ்கிரியதேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் சேறுபூசல்களை நிறுத்தி தமிழீழ விடுதலைப்புலிப் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க அனைத்துக் கட்சிகளும் அணிதிரள வேண்டும் என அஸ்கிரி சியாம்மா நிக்காய தேரர் உடுகம ஸ்ரீ புத்தரகித்த தேரர் தெரிவித்துள்ளார்.

15 ஆவது சார்க் மாநாடு குறித்துத் தெளிவுபடுத்தும் நோக்கில் வெளிவிவகார அமைச்சர் ரோகித்த போகொல்லாகம அண்மையில் அஸ்கிரி சியாம்மா நிக்காய தேரரைச் சந்தித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் நாட்டிற்காகப் பாரிய சேவையாற்றி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு வாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமாயின் இந்த நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறுகிய அரசியல் நோக்கங்களைச் சற்றுப் புறந்தள்ளிவிட்டு நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு செயலாற்ற வேண்டியது மிகவும் இன்றியமையாததென தேரர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# கடந்த கால அரசியல்வாதிகளின் பிழைகளை ஜனாதிபதி உணர்ந்து கொண்டுள்ளார்

## அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த கால அரசியல் வாதிகள் விட்ட பிழைகளை உணர்ந்துகொண்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிழக்கு மாகாணத்தின் முதலாமைச்சராக பிள்ளையானை நியமித்ததன் மூலம் தமிழ் மக்களின் நம்பிக்கைகளை வென்றுள்ளார் என கட்டட மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சர் ராஜிதசேனாரட்ன தெரிவித்துள்ளார். பிரபாகரனின் கனவுகளை தோற்கடித்து கிழக்கு மாகாண மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முதலமைச்சர் பிள்ளையான் தீர்த்து வைப்பார் என அரசாங்கம் நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

சில பிழையான சிங்கள அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளால் கடந்த கால தமிழ் சமூகம் அனைத்து சிங்கள தலைவர்களையும் சந்தேகத்துடன் பார்க்கிறது என தெரிவித்த அமைச்சர் அதனால்த்தான் வடக்கில் உள்ள இளைஞர்களும் யுவதிகளும் ஆயுதங்களை ஏந்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள் எனக் கூறினார்.


முன்னால் வடக்கு, கிழக்கு மாகாண முதலாமைச்சர் வரதராஜாப்பெருமாள் அரசாங்கத்தின் ஆதரவை பெற்றுக்கொள்ளாததால் வடக்கு, கிழக்கில் தமிழீழத்தை பிரகடனப்படுத்தியிருந்ததாக அவர் கூறினார்.

இந்த நிலையில் புதிதாக உருவாக்கப் பட்டிருக்கும் தனியான கிழக்கு மாகாணத்தின் கல்வி, விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் கைத்தொழில் அபிவிருத்திகள் தொடர்பாக கிழக்கு மாகாண முதலாமைச்சருக்கு பாரிய பொறுப்புகள் இருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் கூடிய விரைவில் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டால் இளைஞர் யுவதிகளின் வேலை வாய்ப்பு தொடர்பாக அச்சம் ஏற்படாது என கூறியுள்ளார். கடந்த கால மோதல்களால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட இடிபாடுகள் மற்றும் சேதங்களை மீண்டும் புனரமைத்து பாதிவழியில் இடைநிறுத்தப் பட்டிருக்கும் அபிவிருத்திப்பணிகளை முன்னெடுப்பது தொடர்பாக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், கட்டட மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சர் ராஜிதசோனாரட்னாவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் பாடசாலைகள், வைத்தியசாலைகள், அரசாங்க திணைக்களங்கள், வீதிகள், பாலங்கள் போன்றவற்றின் அபிவிருத்தி தொடர்பாக கவனம் செலுத்தவேண்டும் என கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் அமைச்சர் ராஜித சேனாரட்னவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)


பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு நான்கு முச்சக்கரவண்டிகளும் ஒரு ஊன்று கோலும் சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டன. இவ்வகையில் மாற்று ஆற்றல் உள்ள பயனாளி ஒருவருக்கு பருத்தித்துறை பிரதேச செயலக முன்னாள் நிதி உதவியாளர் சீ.இராசநாயகம் முச்சக் கர வண்டி வழங்குவதையும் அதன் அருகில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் செ. சுரேந்திரா நிற்பதையும் படத்தில் காணலாம்.



## ஆசிய கிண்ணத் தொடர்

# அலாம், தான்வீர் அபாரம்; பாகிஸ்தான் அணி வெற்றி

## ஹொங்கொங் அணி பரிதாபம்



தான்வீர்

(கராச்சி)


ஆசியக் கிண்ண முதல் சுற்று ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 155 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஹொங்கொங் அணியை வீழ்த்தியது.

பாகிஸ்தானில் நேற்று ஆரம்பமான ஆசியக் கிண்ணத் தொடரில் முதல் சுற்று 2-வது ஆட்டத்தில் பி பிரிவைச் சேர்ந்த பாகிஸ்தான், ஹொங்கொங் அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 288 ஓட்டங்களை எடுத்தது.

ஒரு கட்டத்தில் 161 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 7 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய பாகிஸ்தான் அணியை அலாம், தான்வீர் ஜோடி சிறப்பாக ஆடி இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களைப் பகிர்ந்து, மீட்டது.

இதில் யூனிஸ்கான் 67 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் அலாம் 63 ஓட்டங்களையும் மற்றும் தான்வீர் 59 ஓட்டங்களையும்



அலாம்

எடுத்தனர்.

பந்துவீச்சில் நாடீம் அகமெட் 4 விக்கெட்டுக்களையும் இர்பான் அகமெட் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 289 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ஹொங்கொங் அணி 37.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 155 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ஆட்டமிழக்காமல் அப்பாஸ் 26 ஓட்டங்களையும் அணித்தலைவர் டார்24, அமர் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் தான்வீர், அஞ்சும் மற்றும் அப்ரிடி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி 2 புள்ளிகளைப் பெற்று பி பிரிவில் முன்னிலை பெற்றது. ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணியின் சொகைல் தான்வீர் தெரிவானார். (5)

விளையாட்டு



# அஷ்ரபுல் சதம்; பங்களாதேஷ் அணி ஐக்கிய அரபு எமிரேட்ஸை வீழ்த்தியது

(லாகூர்)

அணித்தலைவர் மொகமெட் அஷ்ரபுல் சதமடிக்க பங்களாதேஷ் அணி 96 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை வென்றது.


ஆசிய கிண்ண முதல் சுற்று ஆட்டத்தில் நேற்று லாகூரில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ஏ பிரிவைச் சேர்ந்த பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, மொகமெட் அஷ்ரபுல் சதம் விளாச 50 ஓவர்கள் நிறைவில்8 விக்கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் மொகமெட் அஷ்ரபுல் 109 ஓட்டங்களையும் ரகீபுல் ஹசன் 83 ஓட்டங்களையும் மற்றும் தமீம் இக்பால் 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீட் ஷா 3 விக்கெட்டுக்களையும் குர்ராம் ஹான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்கள் நிறைவில்301 ஓட்டங்களை எடுக்கவேண்டும் என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு




எமிரேட்ஸ் அணி 45.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களை எடுத்து 96 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் சிறப்பாக ஆடிய குர்ராம் ஹான் 78 ஓட்டங்களையும் அஷாட் அலி 41 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அப்துர் ரஷாக் 3 விக்கெட்டுக்களையும் மாமுடுல்லா, அலோக் கபாலி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.


இவ் வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி 2 புள்ளிகளைப் பெற்று தொடரில் ஏ பிரிவில் முன்னிலையைப் பெற்றுள்ளது.

போட்டியின் நாயகனாக பங்களாதேஷ் அணித் தலைவர் மொகமெட் அஷ்ரபுல் தெரிவானார். (5)

## சானியா முன்னேற்றம்

(புதுடில்லி)

சர்வதேச பெண்கள் டென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் சானியா மிர்ஸா 32-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.



இரட்டையர் பிரிவில் 19-வது இடத்திலேயே உள்ளார். கைமடிக்கட்டில் சத்திர சிகிச்சை செய்து கொண்டதால் சிறிதுகாலம் ஓய்வில் இருந்த சானியாவுக்கு விம்பிள்டனில் 32-வது தரவரிசை கொடுக்கப்பட்டது.


விம்பிள்டனில் எளிதான சுற்றில் இடம் பெற்றுள்ள சானியா அடுத்தடுத்து வெற்றி பெற்றால் தரவரிசைப் பட்டியலில் சில இடங்கள் முன்னேற வாய்ப்பு உள்ளது.

ஏ.டி.பி ஆண்கள் இரட்டையர் பிரிவில் பூபதி 13, பயஸ் 23-வது இடங்களில் உள்ளனர்.

நான்கு ஆண்டுகளுக்கு பின்பு இருவரும் இணைந்து ஆடிய முதல் தொடரிலேயே இறுதிப்போட்டி வரை சென்றனர். (5)

## விம்பிள்டன் டென்னிஸ்

# முதலாவது சுற்று ஆட்டத்தில் பெடரர், இவானோவிச் வெற்றி



(லண்டன்)

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

முதல்நாளில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த முதல் சுற்று ஆட்டத்தில் தொடர்ந்து 5முறை சம்பியன் பட்டத்தை வென்றவரும் முதல் நிலை வீரருமான ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) 6:3, 6:2, 6:2 என்ற நேர் செற் கணக்கில் ஸ்லோவாக்கியா வீரர் டொமினிக்கை தோற்கடித்து 2-வது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்ற ஆட்டங்களில் மார்கோஸ் பகாடிஸ் (சைப்பிரஸ்), பெர்னாண்டோ கொனாலிஸ் (சிலி), தோமஸ் ஜோகன்சன் (சுவீடன்), ஆல்பர்ட் மோன்டானஸ் (ஸ்பெயின்), ஆந்த்ரே செபி (இத்தாலி), றொபின் சோடர்லிங் (சுவீடன்), ஜுயன் கார்லோஸ் பெரீரா (ஸ்பெயின்) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டத்தில் முதல் நிலை வீராங்கனை அனா இவானோவிச் (செர்பியா) 6:1, 6:2 என்ற நேர் செற் கணக்கில் ரோசனாவை (பராகுவே) தோற்கடித்து 2-வது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்ற ஆட்டங்களில் செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), சமந்தா (அவுஸ்திரேலியா), எலீனா வெசினா (ரஷ்யா), பவுலின் (பிரான்ஸ்), நா லி (சீனா) நாதலி டெசி (பிரான்ஸ்) நகேலே வைடிசோவா (செக் குடியரசு) ஆகியோர் வெற்றி கண்டனர். (5)

# செம்மணி வயல்களில் நெற் செய்கைக்கு 13 ஆண்டுகளின் பின்னர் அனுமதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

13 ஆண்டுகளின் பின் செம்மணி, அரியாலை மத்தி ஆகிய வயல் வெளிகளில் நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்ள அனுமதியளிப்பதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதிகளில் நெற் பயிர்ச் செய்கைக்கு அனுமதி அளிக்க வேண்டும் என சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு படையினரிடம் வலியுறுத்தி வந்தது.

இதற்கமைய செம்மணி, அரியாலை மத்திய பகுதியான புகையிரதப் பாதையை அண்டிய பிரதேச வயல் வெளிகளில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள அனுமதியளிப்பதாக யாழ்.51-வது படையணியினர் உறுதி வழங்கியுள்ளனர்.

நேற்று 512-வது படை முகாமில் நடைபெற்ற சந்திப்பிலேயே படையினர் இவ் உறுதி மொழியை சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவினரிடம் தெரிவித்துள்ளனர்.

இச் சந்திப்பில் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவின் சார்பில் அதன் தலைவர் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, செயலாளர் சமூக சேவையாளர் குருமுதல்வர் நேசகுமார் அடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படைத் தரப்பில் 51-வது படையணியின் தளபதி ஜெனரல் பெனாட் மார்க், 512-வது படையணியின் தளபதி பிரிகேடியர் ரூவான் குலதுங்க மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதில் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவினரால் ஏற்கனவே கேட்டதற்கமைய யாழ்.நகரில் ஸ்ரான்லி வீதி, பழைய தபால் நிலைய வீதி, முனியப்பர் கோவில் வீதி, கே.கே.எஸ். வீதி ஆகியவற்றிலுள்ள தடைகளை அகற்றி மக்கள் முழுமையாகப் பயன்படுத்த அனுமதிப்பதாகப் படையினர் உறுதியளித்துள்ளனர்.

அத்துடன் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் வேம்படிச் சந்தியிலிருந்து ஆரியகுளம் சந்தி வரையான பருத்தித்துறை வீதியில் பயணிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் வீதித் தடை மேடுகளையும் பல இடங்களில் அகற்றியுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதனை வரவேற்ற சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவினர், வேம்படிச் சந்தியூடாக வாகனத் தொடரணியின்போது ஆஸ்பத்திரி வீதியூடாக வேம்படி வீதியால் பயணிக்க அனுமதிவழங்க வேண்டும் என எடுத்துக் கூறினர். (எ-5)

## இலங்கையின்...

யுத்தநிறுத்த உடன்படிக்கையை அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக ரத்துச் செய்ததனைத் தொடர்ந்து நோர்வே தமது பணிகளிலிருந்து விலகிக் கொண்டது.

இலங்கைக்கான சமாதான ஏற்பாட்டாளராகத் தொடர்ந்தும் பங்களிப்பு வழங்கநோர்வே அரசாங்கம் முனைப்புக் காட்டி வருகின்ற போதிலும் இலங்கை அரசாங்கம் அதனை நிராகரித்து வருகின்றது என்றுள்ளது. (ச-5)

## கடும்...

நிறுவனங்களின் செயற்பாட்டில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

வடக்குக் கிழக்கு நிலைமைகள் தொடர்பாக ஐ.நா. முகவர் நிறுவனங்களின் நிலையியற்குழு மேலும் தெரிவித்துள்ளதாவது,

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பிரதேசங்களின் முன்னரங்க நிலைகளில் இரு தரப்புக்குமிடையில் தொடர்ச்சியாகக் கடும் மோதல் இடம்பெற்று வருகின்றன.

இதனால் இப் பிரதேசங்களில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அங்கு படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் வழமையான செயற்பாடுகளாக இடம்பெறுகின்றன.

இவ்வாறான பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாக தன்னார்வ மனிதநேய தொண்டு நிறுவனங்களின் செயற்பாட்டிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. வவுனியா முன்னரங்க நிலையில் கடும் மோதல்கள் இடம்பெறுவதைத் தொடர்ந்து நெடுங்கேணி, வவுனியா வடக்குப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டிசுட்டான், புதுக்குடியிருப்புப் பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## வவுனியாவில் ஒருவர்...

ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் கொல்லப்பட்டவரிடமிருந்து கைக்குண்டு ஒன்று, கைத் தொலைபேசி என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இறந்தவர் பூந்தோட்ட நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த மருதமுத்து காளிசெல்வம் (வயது-30) என அவரது மனைவி அடையாளம் காட்டியுள்ளார்.

நேற்று அதிகாலை வேறு சிலருடன் குளத்துக்கு மீன்பிடிப்பதற்காகச் சென்ற தனது கணவன் சுட்டுக்கொல்லப்பட்டுக் கிடந்ததைக் கண்டதாகவும் இறந்தவரின் மனைவி தெரிவித்துள்ளார்.

பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தைச் சூழ்ந்த பகுதியில் காவல் கடமையிலிருந்த பொலிஸார் தமக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்துப் பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தின் வெளிப்புறத்தின் பற்றைப் பகுதியில் பதுங்கியிருந்த வேளை குளத்துப் பக்கமாக இருந்து சிலர் வருவதைக் கண்டு, அவர்களை நிற்குமாறு உத்தரவிட்டபோது அவர்கள் நிற்கவில்லை என்றும் அதனையடுத்துப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் குளத்துப் பகுதியிலிருந்து பொலிஸாரை நோக்கி விடுதலைப்புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இதனையடுத்து இரு தரப்பினருக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் ஏனையோர் தப்பியோடிவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதிபதி எம்.வை.எம்.இஸடீன் விசாரணைகளை மேற்கொண்டார். (ச-5)

## தென்னிந்தியாவிலிருந்து...

யாழ்ப்பாணத்திற்குத் தேவையான பொருள்களைத் தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களைத் தேடிக் கொள்வதில் காணப்படும் சிக்கல் காரணமாகவும் யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் வெளியேறுவதாக அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரின் பாதுகாப்புடன் தென்னிந்தியாவிலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அத்தியாவசியப் பொருள்கள் கொண்டு வரப்படவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை யாழ்.குடாநாட்டிலுள்ள மீனவர்கள், விவசாயிகள் மற்றும் பனை உற்பத்தியாளர்கள் மன்னாருக்கும் யாழ்ப்பாணம் குறிகாட்டுவானுக்குமிடையில் படகுச் சேவையை நடத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதனூடாகக் கொழும்புக்கு தமது உற்பத்திப் பொருள்களைக் கொண்டு வர முடியும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் இடம்பெறும் கப்பல் சேவைகளுக்கு ஒருவருக் குத் தலா 5 ஆயிரம் ரூபாவும் விமானச் சேவை க்கு 9 ஆயிரம் ரூபாவும் அறவிடப்படுகின்றன.

இந் நிலையில் குடாநாட்டு விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களைக் கொழும்புக்குக் கொண்டு வரும் நோக்கில் விரைவில் யாழ்ப்பாணத்திற்கும் மன்னாருக்குமிடையில் படகுச் சேவை ஆரம்பிக்கப்படும் என சமூக சேவைகள் ம்ற்றும் சமூக நலன்புரித் துறை அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார். (ச-5)

## டீசலின் விலையை 10 ரூபாயால்...

யொன்றை அறிமுகப்படுத்தியதையடுத்து டீசலின் விலையை 20 ரூபாயினால் லங்கா ஐ.ஓ.சி.நிறுவனம் அதிகரித்தது.

இதனால் அனைவரும் இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபன எரிபொருள் நிரப்பு நிலையங்களை நாடிச் செல்வதால் கூட்டுத்தாபனத்திற்கு டீசல் சந்தைப்படுத்துவதில் ஏற்படும் நட்டம் அதிகரித்திருப்பதாக அமைச்சர் பௌசி சுட்டிக்காட்டியிருந்தார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை விலை மட்டத்திற்கு டீசல் விலையைக் குறைக்குமாறும் அவ்வா றில்லாத பட்சத்தில் நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டு லங்கா ஐ.ஓ.சிக்கு அமைச்சர் கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தார்.

இருந்தபோதும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தீர்வையை நீக்கினால் டீசல் விலையைக் குறைக்க முடியும் என லங்கா ஐ.ஓ.சி. நிர்வாகம் பெற்றோலிய வள அமைச்சுக்கு அறிவித்திருந்தது.

இந் நிலையில் அமைச்சர் பௌசியினால் மீண்டும் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமையவே தற்போது டீசல் விலையைக் குறைக்க லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தீர்மானித்துள்ளது. (ச-5)

## மின்சார சபைத் தலைவர் உட்பட...

ஜனாதிப்தியின் அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் மாலை மின் சார சபைப் பொறியியலாளர்கள் சங்கத்தினர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கச் சென்றனர்.

அங்கு மின்சார சபைத் தலைவரை அவரது பதவியை விட்டு விலக்குவதாக ஜனாதிபதி உறுதிமொழி வழங்கியிருக்கிறார். இதனையடுத்து மின்சார சபைப் பொறியியலாளர்கள் தமது போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தனர்.

இதனையடுத்து அன்றிரவே மின்சார சபைத் தலைவருடன் தொடர்பு கொண்ட ஜனாதிபதி உடனடியாகப் பணியிலிருந்து விலகுமாறு அவருக்குக் கடும் அழுத்தம் கொடுத்திருந்தார்.

இதனால் விரக்தியடைந்த மின்சார சபை தலைவர் உட்பட உயரதிகாரிகள் அனை வரும் தமது பதவிகளிலிருந்து கூண்டோடு விலகியுள்ளனர்.

முதலில் மின்சார சபைத் தலைவர் தனது பதவியைச் சொந்த விருப்பின் பேரில் விலகுவதாக அறிவித்தார். இதனையடுத்து உயரதிகாரிகளும் தமது பதவிகளைச் சொந்த விருப்பின் அடிப்படையில் விலகுவதாக அறிவித்தனர்.

இந்த விவகாரம் அரச உயர் மட்டத்தில் பெரும் பூதாகரமாக உருவெடுத்துள்ளது. (ச-5)

## 13 ஆவது திருத்தச் சட்டத்தினை...

இரு தரப்பினருக்குமிடையில் பொதுமக்கள், குறிப்பாகத் தமிழ் மக்கள் சிக்கித் துன்பப்படுகின்ற நிலைமைகளை அறிந்து மக்களுக்கு நிவாரணம் செய்ய வேண்டும் என்று மதத் தலைவர்கள் ஜனாதிபதியிடம் கோரியதாகவும் மன்னார் ஆயர் தெரிவித்துள்ளார்.சர்வமதத் தலைவர்கள் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இது தொடர்பாக மன்னார் ஆயர் மேலும் கூறியுள்ளதாவது,

மனித உரிமை மீறல்கள், யுத்தத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் என்பன குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. இவற்றை செவிமடுத்த ஜனாதிபதி, பிரச்சினைகள் தொடர்பாக எழுத்து மூலமாகத் தன்னிடம் சமர்ப்பிக்குமாறு அவற்றுக்கு உடனடியாகத் தீர்வு காண்பதாகவும் தெரிவித்ததாக ஆயர் கூறினார்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பௌத்த குருமார்கள், நாட்டில் சாந்தி, சமாதானத்துடன் பொதுமக்கள் வாழ்வதற்கான வழிவகைகளை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை சமயங்களை அடிப்படையாக வைத்து எமது நாட்டில் எத்தகைய மோதல்களும் ஏற்பட்டதில்லை. சமயங்களைப் பிரித்துப் பார்ப்பதை விடுத்து அதனூடாக ஐக்கியத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

சகல சமயங்களுக்குமான ஒரே வழிமுறையாக அகிம்சையை அரசாங்கம் அங்கீகரித்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சமய வழிபாட்டுத் தலங்களை அபிவிருத்தி செய்வதற்காக நிதி வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

நகர அபிவிருத்தி மற்றும் புனிதப் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில்; நாடளாவிய ரீதியிலுள்ள 42 இந்து, பௌத்த, இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ மதத் தலங்களை அபிவிருத்தி செய்வதற்காக 405 மில்லியன் ரூபா ஜனாதிபதியினால் பகிர்ந்தளிக்கப்பட்டது.இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார். (ச-5)


INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Science and Technology

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office : 021 222 3641
Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்

Diploma Courses
- Diploma in DTP
- Diploma in MS Office
- Diploma in Hardware Technology

On-Line Class
- Diploma in PC Application & Office Management (MS Office syllabus included)

Work Shop Classes
- PC Maintenance & Hardware
- Adobe Photoshop

Certificate Courses
- MS Word
- MS Excel
- MS Access
- CorelDRAW
- PageMaker
- Visual Basic
- Java
- HTML & J Scripts
- Pascal
- C/C++

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்

வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் : 18/7/2008
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் : 19/7/2008

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் : 250/-

Centre for Information Technology

-Executive Officer


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.06.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.